

# எழுந்தமிழ்

## முத்தமிழ் விழா மலர் - 2010



யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரி,
தமிழ்மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donated by

S. Amirthalingam
President
Jaffna National College of Education
Kopay

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்தமிழ்

## முத்தமிழ்விழா மலர்
## 2010



யாழ்ப்பாணம்,
தேசிய கல்வியியற் கல்லூரி,
தமிழ் மன்றம்.

7095(P) Area

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி S.K.யோகநாதன் அவர்களின்

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றத்தினால் ஆண்டு தோறும் சிறப்பாகக் கொண்டாடப்படும் முத்தமிழ் விழாவில், இம்முறையும் புதுப்பொலிவுடன் வெளிவரும் "எழுந்தமிழ்" சஞ்சிகைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்லூரியின் பெருமைகளைப் பறைசாற்றும் விழாக்களில் சிறப்பான இடத்தை முத்தமிழ் விழா பெறுகின்றது. கல்லூரியில் கொண்டாடப்படும் இம்முத்தமிழ் விழாக்கள் இன்றைய நவீன உலகில் அருகிவரும் கலை இலக்கிய உலகிற்குத் தீனி போடுவதாக அமைந்து காணப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை. இவ்வாறானதொரு சூழலில் ஆசிரியர் சமூகத்திற்கு முத்தமிழ் விழா பற்றிய விழிப்புணர்வூட்டவும், ஆசிரிய மாணவர்களின் இளம் படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களை வெளிக் கொணரவும் இவைபோன்ற விழாக்கள் பெரிதும் உதவுகின்றன.

இந்த வகையில் இலக்கிய ஆற்றல்கள் ஒரு மனிதனைப் படைப்பாளியாக வெளிஉலகத்திற்கு இனங்காட்டுகின்றன. இவ்வாறு உருவாகும் படைப்பாளி தனது படைப்புமூலம் உலகத்தையே இணைக்கின்றான். அதுமட்டும் அல்லாமல் உலகத்தவரை வழிநடத்தும் பெருமையையும் பெறுகின்றான். இவ்வாறு உருவாகும் படைப்பாளிகளை சமூகத்திற்கு வெளிக் கொண்டுவரும் "எழுந்தமிழ்" சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து பல படைப்பாளிகளை சமூகத்துக்கு வழங்கவேண்டும் என வாழ்த்து கின்றேன்.

**திரு.S.K.யோகநாதன்**
**பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி நிர்மலாதேவி நல்லையா அவர்களின்

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் மன்றமானது இவ்வருடம் முகிழ்நிலை ஆசிரியர்களின் மொழிசார் ஆக்கத்திறன் விருத்தியை இலக்காகக் கொண்டு இயல், இசை, நாடகம் சார் பல்வேறு போட்டிகளை நடாத்தியதோடு, இறுதி நிகழ்வாக முத்தமிழ் விழாவையும் சிறப்புற நடத்துகின்றது. இவற்றினூடாகப் பெற்ற ஆற்றல்களும் அனுபவங்களும் சீரிய சிந்தனையுடன் நேரிய வழியில் தன்னலம் கருதாது பொதுநலம் பேணும் தன்மைகொண்ட மனிதம் நிறைந்த மானுடர்களாக எதிர்கால சந்ததியினர் உருவாக வழிவகுக்கும் என நம்புகின்றேன்.

இம் மன்றச் செயற்பாடுகளிற் பங்கேற்றதன் ஊடாக அமுதமொழியாம் தமிழ்மொழி இனிய சொற்பிரயோகங்களால் அழகியல் தொடக்கம் அறிவியல் வரையான பாடங்களை கற்றுத்தரவல்ல நல்லாசான்களாக எமது முகிழ்நிலை ஆசிரியர்கள் திகழ்வார்கள் என்பது உறுதி.

முத்தமிழ் விழா நிகழ்வுகள் சிறப்புற அமைவதில் முன்னின்று உழைத்த மன்றக்காப்பாளர், செயற்பாட்டு உறுப்பினர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக் களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ் வடைகின்றேன்.

**கலாநிதி நிர்மலாதேவி நல்லையா**
**உப பீடாதிபதி (நிதியும் நிர்வாகமும்),**
**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

### உப பீடாதிபதி, திருமதி ஜெயமலர் தியாகலிங்கம் அவர்களின்

# ஆசிச்செய்தி

பல்வேறு ஆற்றல்களைக் கொண்ட பூரண ஆளுமை கொண்ட நற் சமூகம் ஒன்றை உருவாக்கும் மகத்தான பங்கும் பணியும் ஆசிரியருக்கு உரியதாகும். அதற்கேற்ப ஆசிரியர்களை அறிவு, ஆற்றல், மனப்பாங்கு, விழுமியங்கள் என்பவற்றைக் கொண்ட பன்முகப் பாங்குடையவர்களாக ஆக்கிக்கொள்வதில் கல்வி நிறுவனங்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியானது, முகிழ்நிலை ஆசிரியர்களிடையே பாடக் கலைத்திட்ட, இணைக்கலைத்திட்ட அம்சங்களை சிறப்புற செயற்படுத்தி வருகின்றது. விசேடமாக வருடம் தோறும் தமிழ் மன்றத்தினால் முன்னெடுக்கப்படும் இயல், இசை, நாடகம் என்ற முத்துறைகளைக்கொண்ட முத்தமிழ் விழா எமது முகிழ் நிலையாசிரியர்களது உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்த்தெடுப் பதிலும் முன் வைப்பதிலும் பங்களிப்பு நல்கி வருகின்றது.

மேலும் இவ்வாண்டிற்கான முத்தமிழ் விழாவானது கல்லூரியின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவாக இடம்பெறுவதும் மகிழ்விற்குரியதாகும். (2000-2010) கல்லூரியின் கற்றல் செயற்பாடுகளுக்குப் போன்று இணைச் செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, முகிழ்நிலை ஆசிரியர்களின் திறன்களை வளர்ப்பதில் ஊக்குவிப்பு வழங்கி வரும் பீடாதிபதி அவர்களின் அனுசரணையால் இவ் விழாவிற்கான செயற்பாடுகள் யாவும் குறுகிய காலத்துக்குள் தமிழ் மன்றத்தினால் சிறப்பாகவும் ஒழுங்காகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை பாராட்டுக் குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்லாது, வெற்றியாளர்களின் ஆக்கங்கள், தமிழ் மொழியின் தனித்துவம் என்பவற்றை உள்ளடக்கி "எழுந்தமிழ்"எனும் சஞ்சிகையினையும் வெளியிட்டு வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான அருஞ்செயல்களை நெறிப்படுத்தி, ஒழுங்கமைத்து, செயற்படுத்திய தமிழ் மன்றத்தின் காப்பாளர்கள் திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா, திரு. பாலசிங்கம் பாலகணேசன் அவர்கள், உடன் பணியாற்றிய தமிழ் மன்றத்தின் பிரதிநிதிகள் மற்றும் விடாமுயற்சியுடனும் உற்சாகத்துடனும் பங்குபற்றிய அனைத்து முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

**திருமதி ஜெயமலர் தியாகலிங்கம்**
**உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)**
**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

உப பீடாதிபதி, திருமதி செ.சிவபாதம்

அவர்களின்

## ஆசிச்செய்தி

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து மூத்த குடிகளது தமிழ் மொழியின் இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளையும் வளர்த்தெடுப்பதில் அழியாத இடத்தைப் பிடித்திருக்கும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றத்தினரால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் "எழுந்தமிழ்" சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தமிழ் மன்றம் வருடாவருடம் நடாத்திவரும் "முத்தமிழ் விழாவை" ஒட்டி வெளிவரும் இச் சஞ்சிகையானது அதற்காக நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெற்ற ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது. இவற்றை எல்லாம் சிறப்புற ஒழுங்குபடுத்தி நடாத்திவரும் தமிழ் மன்றக் காப்பாளருக்கும் அங்கத்தவர்கட்கும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் இப்பணி சிறக்க வித்தக விநாயகனை வேண்டுகின்றேன்.

இக் கல்லூரியிலிருந்து வெளியேறும் முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கட்குப் பல்வேறு அனுபவங்களை வழங்கி இச் செயற்பாட்டினை எதிர்காலத்தில் தத்தம் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தக் களம் அமைத்துக் கொடுக்கும் தமிழ் மன்றத்திற்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன்.

**திருமதி செ. சிவபாதம்**
**உப பீடாதிபதி (தொடருறு கல்வி),**
**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் உள்ளத்திலிருந்து.....

"மாற்றம் ஒன்றே மாற்றமில்லை" என்ற வைர வரிகளிற்கிணங்க எத்தனையோ நூற்றாண்டு களைக் கடந்து வந்தாலும் பெரும் இடர்வந்த வேளைகளில் நடை தளர்ந்தாலும் தனக்கென்று தன்மானமாகத் தனித்துவமான இடத்தைப் பற்றிப் பிடித்திருப்பது தமிழ் என்றால் யாரும் தலையசைக்க முடியாது. செம்மொழியாம் நம் தாய்மொழி தமிழ் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலும் முன்தோன்றிய மூத்த மொழி எழும் ஒவ்வொரு புதிய யுகத்திலும் காலத்தின் போக்கிற்கேற்ப புதுமைக் குணமும் பழமை மணமும் மாறா வண்ணம் வீசும் செந்தமிழ் எமது தமிழ் அந்த தேன் தமிழை சுவைத்து முத்தமிழ் செல்வங்களைப் பெற்று நாம் எமது வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும். ஒவ்வொரு மனிதனையும் நடத்தைகளை மாற்றும் செயற்பாடு கல்வி. அந்த வகையில் எமது கல்வியியற் கல்லூரியில் வாரம்தோறும் செயற்பட்டு வரும் தமிழ் மன்றம் எனும் ஓடமானது வாழ்வின் அனுபவக்கடலை எமது முகிழ்நிலை ஆசிரியர்கள் திறம்பட வெற்றி கொள்ள வேண்டும் என்ற ரீதியில் அவர்களின் திறமைகளை வெளிக் கொணர்ந்து அவற்றிற்கு களம் அமைத்துக் கொடுக்கின்றது. அத்துடன் அவர்களை மொழிப் பற்றுடையவர்களாகவும் நல்ல ஆளுமை பொருந்தியவர்களாகவும் மாற்றி வளப்படுத்துவதில் பெருமிதம் கொள்கின்றது.

தமிழ் மன்றத்தின் தலைவராக செயற்பட்டதினூடே எனது ஆளுமை ஆற்றல்கள் தலைமைத்துவப் பண்பை வளர்த்து, தமிழ் மொழியின் நெளிவு சுழிவுகளை அறிந்து அதன்படி ஏனையவருக்கும் தமிழின் பெருமையை எடுத்தியம்பக்கூடியதாக உள்ளது. எம் மன்றத்தின் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் பாடுபட்ட அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடும் நீரில் ஸ்நானம் பண்ணவேண்டும் என்ற ரீதியில் தொடர்ந்து கற்றுக்கொண்டிருக்கும் ஓர் உன்னதமான ஆசிரியரை வளர்ப்பதன் மூலம் புதியதோர் உலகத்தைப் படைத்து, இளம் சமூகத்தின் திறமைகளை வெளிக்கொணரப்படும் வகையில் அமையும் அடித்தளமாக எமது மன்றம் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழரின் நாகரிகத்தை பொருத்திக் காட்டும் கண்ணாடி இலக்கியம் அந்த ரீதியில் எமது கல்வியியற் கல்லூரியின் பத்தாம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் எமது முகிழ்நிலை ஆசிரியர்கள் முத்தமிழ் திறமைகளை எதிர்கால சந்ததியினருக்குப் பதிவுசெய்யும் ஏடாக "எழுந்தமிழ்" சஞ்சிகை வெளிவருவதிற் பெரிதுவக்கின்றேன்.

**திரு. உதயகுமார் சுஜிதரன்**
**தலைவர்(தமிழ்மன்றம்)**
**(2ம் வருடம் ஆரம்பக்கல்வித்துறை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

*"முத்தமிழே தாயே நீ முதிர்ந்தாலும் இனியவளே*
*கத்தும் கடலையும் உன் காலடியில் தமிழ்ச்சங்கம்*
*சொத்தாக வைத்தவற்றைச் சுவைத்து நீ நின்றாலும்*
*செத்தொழிந்து போகாதே செந்தமிழே நீ வாழ்க"*

இற்றைக்கு **21**ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலே நடைபயின்று கொண்டிருக்கும் தமிழினம் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடி" என்ற வகையில் தமிழானது தொன்மையானது,வளம்மிக்கது, நீடியது, அகரத்தை முதன்மையாகக் கொண்டு அறிவு தரும் இலக்கிய இலக்கணப் போக்குகளை கொண்டது என்பது யாவரும் அறிந்ததே அந்த வகையில் இயல்,இசை,நாடகம் என முத்தமிழாய் காணப்படுகின்ற செம்மொழியாம் தமிழ் மொழி சங்கம் வளர்த்த தமிழ்,தமிழ் புலவன் காத்த தமிழ்,எங்கும் நிறைந்த தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், என்றெல்லாம் போற்றப்படுகின்றது.

இவ் அருமைத்தமிழ் எழுத்தாணி கொண்டு ஏட்டிலே பதியப்படாத நாட்களுக்கு முன்பிருந்தே வற்றாத ஜீவ ஊற்றாகத் திகழ்ந்துகொண்டிருக்கின்றது.

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என நிகண்டு கூறுகின்றது. "தமிழுக்கு அமுதென்று பேர்; அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாவேந்தர் பாடியுள்ளார்.

இயந்திரக் கதியும் அவசர யுகமும் கொண்ட இக் காலத்திலும் "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு" என ஆன்றோர் கூறிய வாக்கியத்துக்கிணங்க நடைபயில வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சான்றோர்களின் அரிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும் என்ற பேராவலுடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடம்தோறும் நடைபெற்றுவரும் முத்தமிழ் விழாவிற்கு அணி சேர்க்கும் முகமாக இந்த வருடமும் "எழுந்தமிழ்" என்ற கையேட்டைப் பிரசுரிக்கத் தமிழ் மன்றம் தீர்மானித்துள்ளது.

*"பாடையிலே என்னுடலம் போகும் போதும்*
*பைந்தமிழே உன் நாமம் ஒலிக்க வேண்டும்*
*ஓடையிலே என் சாம்பல் ஓடும் போதும்*
*என் தமிழே சலசலத்து ஓட வேண்டும்"*

எனும் சான்றோரின் கருத்து யாவரிலும் ஊற்றெடுக்க வேண்டுமெனவும் எமக்கு மகுடம் வைத்து நம்மை நாமே சீர்தூக்கிப் பார்க்கவும் பல இலக்கிய அம்சங்களைத் தாங்கிய ஒரு பதிவாகவும், எம் மன்றத்தின் இரண்டாவது முயற்சியாகவும் எழுந்தமிழ் எனும் பைந்தமிழ் ஊற்றை வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

இதற்கு மேலாக எம்மை வழிப்படுத்தியும், ஆலோசனைகள் பல வழங்கியும் இச் சஞ்சிகை மிக விரைவில் வெளிவர உதவிய எமது பீடாதிபதி, உயர்திரு. S.K. யோகநாதன் அவர்களுக்கும் எம்மை நெறிப்படுத்திய உபபீடாதிபதிகள், மற்றும் மன்றக்காப்பாளருக்கும், கல்வி என்னும் ஊற்றை எமக்களிக்கும் கல்வியியலாளருக்கும் இந்நேரத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*பொங்கு தமிழுக்கு இன்னல் விளைத்தால்*
*சங்காரம் நிஜம் என்று சங்கே முழங்கு.*

**பத்திராதிபர்**
**சங்கீதா சத்திய நேசன்**
**2ஆம் வருடம்**
**(விஞ்ஞானம் தமிழ் மொழி மூலம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ் மன்றக் காப்பாளரின்
# வாழ்த்துரை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பித்த நாள்முதல் தமிழ்மொழியின் மேன்மையைக் காத்திடும் முயற்சி தொடர்கிறது. ஆசிரிய மாணவரிடையே மொழி உணர்வையும், இன்பத் தமிழின் இனிமையையும், களநிலை உணர்வாக ஊட்டும் வகையில் மேற்படி மன்றம் செயற்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் முத்தமிழ் விழாவை நடாத்தித் தமிழாய்வு செய்து, தரமான அரங்க நிகழ்ச்சிகளை அரங்கேற்றும் பணி தொடர்கிறது. அவ்வகையில் இவ்வாண்டும் முத்தமிழ்விழா எடுத்து "எழுந்தமிழ்" என்ற விழா மலர் வெளியிடுவது கண்டு ஆனந்தம் அடைகிறேன்.

எங்கள் பீடாதிபதி திரு.S.K.யோகநாதன் அவர்களின் சிறந்த ஆற்றுப்படுத்தலில் எமது கல்லூரியின் சகல மன்றங்களும் சிறப்பாக இயங்குவதை யாவரும் அறிவர். எங்கள் தமிழ்மன்ற வளர்ச்சியில் மிகுந்த அக்கறைகொண்ட பீடாதிபதி அவர்கள் தரமான தமிழ்விழாவாக அமைய வேண்டும் என்பதை மாணவருக்கு அறிவுறுத்தி உற்சாகம் அளிப்பது தனித்துவமானது. ஆண்டு தோறும் தமிழ்விழா தொடர்பாக நடைபெறும் போட்டி சிறப்புக்குரியது. ஒவ்வொரு மாணவரின் தனித்திறமைகளை இப் போட்டியினூடாக வெளிக்கொண்டுவருவது முக்கியம்சமாகும். கல்லூரியில் இவ்விழா மலர் வெளியீடு போன்றவற்றின்மூலம் மாணவர்பெறும் அனுபவஞானம் அவர்கள் கடமையாற்றப் போகும் பள்ளித்தலங்களுக்கு மிகுந்த பயன் சேர்க்கும் என்பது எனது நம்பிக்கை. தமிழ்மன்ற எழுச்சிக்கு உறுதுணையாக என்னுடன் இணைந்துழைத்த மன்றக்காப்பாளர் திரு.பாலகணேசனுக்கு நன்றிகள்கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் தமிழ் மன்ற நிர்வாகிகளுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

**திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா,**
**மன்றக்காப்பாளர்,**
**தமிழ்மன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்றம் - 2010



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) :**
செல்வன் உ.சுஜிதரன் (தலைவர்), திரு.பா.பாலகணேசன் (மன்றக் காப்பாளர்), திரு.S.K.யோகநாதன் (பீடாதிபதி, யா.தே.க.கல்லூரி), திருமதி ஜெ.தியாகலிங்கம் (உப பீடாதிபதி, யா.தே.க.கல்லூரி), திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா (மன்றக் காப்பாளர்)

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :**
செல்வன் து.சுதர்சன் (உபதலைவர்), செல்வி ச. சங்கீதா (பத்திராதிபர்), செல்வன் த. சிவகுமார் (பொருளாளர்), செல்வி நா.கேசனா (உபசெயலாளர்), செல்வி சி.மேனகா (உப பத்திராதிபர்), செல்வி இ. விஜயநிதி (செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் குயில் பாட்டு

பா.பாலகணேசன் (M.A)
விரிவுரையாளர்
தேசிய கல்வியியற்கல்லூரி, யாழ்ப்பாணம்.

*1949 ஆம் ஆண்டில் வெளிவந்த கவிதைத் தொகுப்பில் "குயில்" எனப்பெயரிட்டு வந்த குயில்ப்பாட்டு பாரதியார் பற்றிய பல்துறை சார்ந்த விமர்சனங்களை வெளி உலகிற்குக் கொண்டு வந்துள்ளது. இன்றைய திறனாய்வு முறையில் ஒரு படைப்பாளியின் படைப்புத் தோன்றிய அரசியல் பொருளாதார சமூக கலாசார காரணிகளை தேடி அறிவதன் மூலம் அப்படைப்பு பற்றிய முழுமையான பார்வை பெறப்படுகின்றது. அந்த வகையில் பாரதியின் முப்பெரும் படைப்புக்களாக பாஞ்சாலி சபதம் குயில்பாட்டு, கண்ணன் பாட்டு போன்றவற்றில் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு பற்றி பல்வேறு திறனாய்வுகள் எழுந்து அப்படைப்புக்கள் பற்றிய கணிசமான பார்வையை எமக்கு தந்துவிட்டன. ஆனால் குயில் பாட்டு பாடப்பட்ட சூழல் அதைப் பாடுவதற்குக் கவிஞரை உந்தித்தள்ளிய காரணி கவிஞர் அதனூடாக சொல்ல வரும் விடயம்பற்றிய பல கருத்து மாறுபாடுகள் இன்னும் நிலவி வருகின்றன. பாரதியின் இறப்புக்கு பின் பல்வேறு ஆய்வாளர்கள் அவரது படைப்புகள் பல பற்றி ஆய்வரங்கம் அமைத்து ஆய்வு நிகழ்த்தியபோதும் குயில் பாட்டுப் பற்றிய சர்ச்சை இன்னும் நின்று நிலவிய வண்ணமே உள்ளன.*

*இந்த வகையில் பாரதியின் கையெழுத்து பிரதியிலும் "குயில்" எனப் பெயரிடப்பட்ட குயில்ப்பாட்டின் ஊடாக பாரதி சமூகத்துக்குக் கூறியது என்ன? இந்தப் படைப்பைப் படைக்க கவிஞரை உந்தித் தள்ளிய காரணிகள் எவை? என்பதை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கு 1923ஆம் ஆண்டு கண்ணன் பாட்டு பாரதி அறுபத்தாறு நூல்களோடு அமைத்து முதன்முதல் வெளிவந்தது. குயில்பாட்டு பாரதி புதுவையில் வாழ்ந்த போது தனது பொழுது போக்கும் கடற்கரையில் உள்ள மாஞ்சோலையை கவிதைக் களமாக்கிப் பாடப்பட்ட குயில் பாட்டின் ஊடாக வேதாந்த பொருளை கூறுவதாக சில அறிஞர்கள் கூறுவார்கள். அவர்கள் தம்களத்துக்கு அணிசேர்க்க அக்குயில் பாட்டில் வரும் பாத்திரங்களையும் பல வேதாந்தப் பொருளுக்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமையாக்குவார். அந்த வகையில் அவர்கள் கருத்துக்கள் சிலவற்றைப் பார்ப்பது இங்கு பொருத்தம் என நினைக்கின்றேன்.

அறிஞர் தெ.பொ.மீ. தன் கருத்திற் குயில் ஜீவான்மா எனவும் கவிஞர் பரமான்மா எனவும் மாஞ்சோலை - சம்சாரக்காடு எனவும் கூறி ஜீவான்மா - பரமான்மாவை அடையமுடியாது. ஐம்புல வேடர்களும், மனோவிகாரமும், தாமச உடல் இச்சையும் தடுக்கின்றன. அதேபோல் வேடர்கள் - ஐம்புல வேடர்கள் குரங்கு மனோவிகாரம், மாடு - தாமச உடல் இச்சை ஆகியவை கவிஞரையும் குயிலையும் இணைய விடாது தடுக்கின்றன. இந்த நிலையில் கைவாள் ஆகிய ஞானத்தை உபயோகிக்கமுற்படுவதாக விளக்கம் தருவார். தெ.பொ.மீ. அ.க நவநீத கிருஸ்ணன் குயில் - பசு, கவிஞர் - பதி, மாடு - ஆணவம், குரங்கு - கன்மம், காதல் - மாயை என்று கருதி பதியை அடைய விடாமல் ஆணவம், கன்மம், மாயை பசுவைத் தடுப்பதுபோல் கவிஞரை குயில் அடையவிடாமல் குரங்கு, மாடு, காதல் ஆகிய விடயங்களைத் தடுப்பதாகக் கூறுகின்றார்.

ஆன்மத் தேடலில் குறுக்கிடும் அபானசக்தி மாடன், விட்சேபசக்தி குரங்கு என்பார். மேலும் இசைதான் குயில் அதன் இனிமைக்குக் குறுக்கேவரும் முழக்கமும் கீச்சுக் குரலும் மாடன் குரங்கு எனக்கூறி குயில் - கவிதை மாடு - இலக்கணப்பண்டிதம், குரங்கு - வக்களைச் சொல் விளையாட்டு என்று கருதவும் இடமுண்டு எனக்கூறும் மணிக்கொடி சீனிவாசன் கூறும் கூற்றை கா.மீனாட்சி சுந்தரமும் ஆதரிக்கின்ற அதேவேளை, கீட்சின் கவிதைகளான Nightingale, Endymion இன் தாக்கம் குயில் பாட்டில் உண்டு எனக்கூறி குயில் தன்னை அறியும் கவிஞனின் ஞானக் கனிவைச் சொல்லால் சொல்லும் குறியீடு என்றும் மொழிவார்.

அழகையும் காதலையும் தேடும் கவிஞனின் தேடலும், உடலும், மனமும் (மாடு, குரங்கு) குறுக்கே செய்யும் இடையூறு எனப் பேராசிரியர் சச்சிதானந்தனும் குயிலைத் தூய கவிதையின் குறியீடாக மகாதேவனும் குறிக்கின்றனர்.

விஜயபாரதி ஆன்மாவை மறைக்கும் சித்தத்தின் மூன்று இயல்புகளான சத்துசம்- குயில், ராஜசம்- குரங்கு, தாமசம்- மாடு என ஒப்பிட்டுக் கூறுவார். அத்துடன் சுகி சுப்பிரமணியம் பாலப்பருவம், காளைப்பருவம், மனிதப்பருவம் என்பவற்றை குரங்கு,மாடு, கவிஞன் என்ற பாத்திரங்களோடு ஒப்பிட்டு விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவார். இவைகள் யாவற்றையும் கடந்து சென்றாலே ஆண்டவனை அடையமுடியும் எனக் குயில் பாட்டுத் தத்துவத்தைக் குறிப்பிடுவார்.

பெண்மைக்கு வைக்கப்படும் அகமன சோதனையாக மாடனையும் பொருள் மனத்துயரம் (குரங்கன்) ஊடாகவும் இரண்டையும் கடந்த விருப்பக் காதல் திருமணம் இப்பாட்டின் கருப்பொருள் எனக் கூறும் எஸ். இராமகிருஷ்ணன் கூற்றில் ஓரளவு உண்மை தெறிப்பது போன்று சாராது ஏனெனில் ஏற்கனவே பெண்விடுதலை பற்றி பாடிய பாரதி பெண் திருமணத்தில் செல்வாக்குப் பெறும் அம்சங்களையும் கூறாது விட்டிருக்க முடியாது போல எனக்கு தோன்றுகின்றது. அத்துடன் இத்தகைய வாழ்வுமுறையைக் கண்டித்து இருக்கவும் மேற்படிக் கவிதையை பாரதியார் பாடி இருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது. 'குயில் ஆன்மாதான் ஆனால், தேசத்தின் பழுதுபட்ட ஆன்மா குறியும், நெறியும் குறித்து, தெளிவின்றி நல்லதும் தீயதுமான எல்லைகளுக்கு மாறி மாறிச் சென்று தவிக்கும் "ஆன்மா' என பாஞ்சாலி சபதப்பாடலை (விடுதலை வேட்கை) மையமாக வைத்து திறனாய்வு செய்வார் கே.ஆர்.சீனிவாச ஐயங்கார்.

இவை யாவற்றையும் அவற்றை (குயில் பாட்டை) திறனாய்வு செய்பவரையே விளக்கி நிற்பதாக கூறி தந்த விளக்கத்தை தரும் சிற்பி பாலசுப்பிரமணியம் குயில் தமிழ் அணங்கு என்றும் மாஞ்சோலை தமிழ் நாடு எனவும், தமிழ் குயிலை வேட்டையாட தமிழ்நாட்டிலேயே வேடர்கள் உண்டு எனவும் தமிழ் மொழி முரண்பாடுகளில் சிக்கித்தவிக்கின்றது எனவும் காதலும், சாதலுமாக அருளும் இருளுமாக, சுழலும் விழலுமாக காலந் தோறும் இம்மொழி பட்ட பெரும் துன்பங்களை கூறி மூன்று தமிழ் மன்னர்கள் தமிழ் வளர்த்ததையும் அத் தமிழ் இப்பொழுது அழியும் நிலை எய்தியுள்ளது எனக் கூறி, மாடன் குயிலுக்கு உறவினன், குரங்கன் பணத்தோடு வந்த அந்நியன் தமிழை நேசிப்பதாக மாயம் செய்து வளர்ச்சிக்கு குறுக்கே நிற்கும் பண்டிதமரபு மாடன். அன்னிய மொழி பிதற்றித் தாய்மொழி முன்னேற்றத்தை தடுக்கும் தீமை குரங்கு. இவர்கள் வரலாறு நெடுகிலும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு தடைக் கற்களாக நிற்கின்றன. சொந்த உருவத்தைக்கூட மறைத்துச் செத்தைக் குயில் உருவில் சிதைந்து கிடந்தாலும், சிறகின் வலுவால் வானம் அளந்ததனைத்தையும் அளக்கும் வல்லமை பெறுகின்றது. தமிழ் குயில் என சிற்பி பாலசுப்பிரமணியம் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றுக்கு ஏனைய அறிஞர் கருத்தையும் அரண் சேர்ப்பார். பாஞ்சாலி சபதத்தில் நாடு, கர்ணன் பாட்டில் சமுதாயம் விடுதலை அடைய கவி பாடிய பாரதி குயில் பாட்டில் மொழிவிடுதலை அடைய பாடுவதாக கூறுவார் சிற்பி பாலசுப்பிரமணியம். அவை யாவற்றையும் விடுத்து "குயில் பாட்டு பாரதியின் இளமைக் கதையையே கூறுகின்றது" எனும் கூற்றிலும் ஒரு வலிவு உள்ளது. பாரதி தனது சுயசரிதையில் இளமைக்காதல் பற்றிக் கூறி அதன் நிறைவேறாத ஏக்கத்தை குயில் பாட்டில் கூறுகின்றாரோ என எண்ணத் தோன்றுகின்றது.

பாரதியார் தனது இளமைப்பராயத்தில் ஏற்பட்ட காதலை தனது சுயசரிதையில் கூறுவது இவரது மனதில் அக்காதல் ஏற்படுத்திய தாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. நிறைவேறாத நீண்டநாள் காதல் மனத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினால் ஏற்பட்ட அனுபவ ஏக்கமே ஒரு படைப்பாளியின் அனுபவமாகப் படைப்பு மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

அதற்கான ஆதாரத்தை குயில் பாட்டில் தேடும் போது தூய கவிஞனின் காதலும் தூய்மையற்ற பெண் காதலுமாக எடுத்துக்காட்டப்படுவதுடன் அகத்தியமுனிவரின் குயிலின் முற்பிறப்பு கதை கூறல் புண்பட்ட அவர் மனதிற்கு ஆறுதல் தேடும் ஒரே அம்சமாகவே காணப்படுகின்றது. மேலும் குயில் பாட்டின் ஆண் பாத்திரம் தூய காதலைக்கூற, பெண் பாத்திரமான குயிலி தூய்மையற்ற காதலை எடுத்துக்கூறுகின்றார். இது இளமைக் காதலில் தான் அடைந்த ஏமாற்றத்தையே எடுத்துக் கூறுகின்றார் போல தெரிகின்றது.

சுயசரிதையிலும் தனது இளமைக்காதலி தனது காதலைக் கூறிய நளினப் போக்கு குயில் பாட்டிலும் காணப்படுகின்றது.

எனவே ஒரு படைப்பாளி அனுபவித்த உண்மை அனுபவமே படைப்பு, சிறப்படைவதற்கு காரணமானது பல கவிதைகளின் போக்காக அமைந்து காணப்படுவதுபோல பாரதியின் இளமை வாழ்வில் ஏற்பட்ட காதல் அனுபவமே குயில் பாட்டு எனவும் கதை இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க எம் முத்தமிழ்

மானியூர் ரட்ணேஸ்
கல்வியியலாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

வாழ்க எம் முத்தமிழ் சித்தங்கள் - எழில்
சூழ்ந்த நல் கல்வியியல் அரங்கம் தளைக்கவே

(வாழ்க...)

(வித்தக கலைகளின் விளைநிலமாம்
வியப்புறும் முத்தமிழ் முற்றத்தில்
சித்தங்கள் ஒன்றிற்க்கும் கலை எழிலால்
சீர்பெறும் மானுடம் வளம் பெருகி)
உள்ளார்ந்த ஆற்றல்கள் வெளிக் கொணரும்
உயர்ந்த பண்புகள் இணைந்து வரும்
வல்லமை மிகு எம் தமிழிதழில்
வாசனை எங்கும் பரவட்டும்

(வாழ்க...)

இங்கிதமாய் இசை இனிக்கவரும்
இதம் தரும் நடனம் கூடி வரும்
மங்காத்தமிழின் பண்பியலில்
மலரும் இயல் இசை நாடகமாம்
(சிந்தனை சொல் செயல் சீர்தூக்கி
சிறப்புறும் எங்கள் கல்லூரி
சொந்தங்கள் இணைந்து அரங்கேறி
சொர்க்க(ம்) முத்தமிழில் மூழ்கட்டும்)

(வாழ்க...)

சரித்திரம் போற்றும் சங்கத் தமிழியல்
சங்கதிகளைப் பெற்றுய்திடுவோம்
அழகியல் ஆத்மீக(ம்) அன்பின் வழிதனில்
இலங்கிடு முத்தமிழ் வித்தகமே

(வாழ்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகங்களும் போட்டிகளும்

க.இ.கமலநாதன்,
நாடகத்துறை விரிவுரையாளர்,
நுண்கலை மன்றக் காப்பாளர்.

உலக அரங்கிற் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே நாடகத்துறைக்கென வரலாறு இருந்து வருகின்றது. வளர்ச்சிப் போக்கும் காணப்படுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகள் பல கல்விக்கான சிறப்பு ஊடகமாக நாடகத்தைப் பயன்படுத்தி வந்துள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை அந்நியர் ஆட்சிக்காலத்தில் ஆட்சியாளர் கல்வித்துறையில் நாடகத் துறையைப் புகுத்த விரும்பவில்லை. ஏனெனில், அடிமைக் கல்வி முறையை இலங்கைக்குள் விதைத்தவர்கள் சுதந்திரமான செயற் பாட்டை முன்னெடுக்கும் நாடகத்துறையைக் கல்வித்துறைக்குள் சேர்க்க அச்சம் கொண்டிருக்கலாம். இருப்பினும் இலங்கையின் சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் நாடகத்துறை முகிழ்த் தெழுந்தது. இன்று முழு வீச்சுடன் செயலாற்றி வருகின்றது.

இந்தச் சமுதாயத்திற்குத் தேவையான மனிதரை உருவாக்குவதில் நாடகத்துறைக்கு முக்கியமான பங்கு உண்டு. நாடகம் நல்ல மனிதரை உருவாக்கும்.தன்னம்பிக்கையை வளர்க்கும். ஒற்றுமை, கூட்டு மனப்பான்மையை ஏற்படுத்தும். மகிழ்ச்சியான கற்றல், கற்பித்தலுக்கு வழிவகுக்கும் என்றெல்லாம் அறிவியலுக்கூடாகவும் அனுபவங்களுக்கூடாகவும் அறிந்து இருக்கின்றோம். ஆயினும் நாடகம், போட்டி என்று வருகின்ற போது எல்லாவற்றையும் போட்டு உடைத்துவிடுகின்றோம்.

பாடசாலைகளைப் பொறுத்தவரையிற் சிறுவர் அரங்கப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகள், நாட்டுக் கூத்துப்போட்டி கள் எனப் பல்வேறுபட்ட நிலைகளில் நாடகம் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகள் நடாத்தப்படுகின்றன. மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்தல், தன்னம்பிக்கையுடன் கல்வியைப் பயில உதவுதல், மானுடம் போற்றுதல் எனும் நோக்கில் நடாத்தப் படும் போட்டிகள்அந்நோக்கங்களுக்கெதிராகப் பொறாமை, கோபம், குரோதம், பழியுணர்ச்சி என்பவற்றை தட்டியெழுப்புவ தாக அமைந்துவிடுவதுதான் மிகப் பரிதாபகரமான நிலையாக இன்றும் காணப்படுகின்றது.

ஒரு நாடகப் போட்டியை நடாத்தி முடிப்பது என்பது ஒரு கொலைக்களத்தில் நுழைந்து மாட்டிக்கொண்ட உணர்வுகளையே தருகின்றது. பாடசாலை மட்டம், குடும்பப் பாடசாலை மட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாகாணமட்டம், தேசிய மட்டம் என்று போட்டிகள் விரிவடைந்து செல்லச்செல்ல, போட்டி யாளர்கள் மனதில் வன்முறை எண்ணப்பாடுகளும் வளர்ந்து செல்வதைக் காணமுடிகிறது. இதற்குக் காரணம் என்னவாக இருக்கலாம்?

**போட்டிகளும் நடுவர்களும்**

போட்டிகளுக்கு எவ்வாறு நடுவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்? என்பது இன்னும் சச்சரவான விடயமாகவே நோக்கப்படுகிறது. நாடகப்போட்டிகளின் தன்மையைப் பொறுத்து ஓரளவேனும் அந்நாடக வகை சார்ந்த அறிவை உடைய வராக இருப்பின் வழங்கப்படும் தீர்ப்புகளும் நேர்மையானதாகவும், நியாயமானதாகவும் இருக்கும். ஆனால், போட்டிகளை நடாத் துனர் இறுதி நேரத்திலேயே நடுவர்களைத் தெரிவு செய்வதும் பொருத்தமற்ற நடுவர்களைத் தெரிவு செய்வதும் உண்மையாகப் பாடுபட்டு உழைத்த நாடக நெறியாளர், அவர் சார்ந்த பாடசாலைப் பிள்ளைகள் மனதில் வேதனையையும், விரக்தியையும் ஏற்படுத்து கின்றது. உதாரணமாக சிறுவர் நாடகப்போட்டி ஒன்றுக்கு ஒரு பாரம்பரிய நாடகத்துறை சார்ந்தவரையும், ஒரு தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரையும் ஒரு சங்கீத ஆசிரியரையும் நடுவர்களாக நியமித்தால் அந்நாடகப்போட்டி முடிவுகள் எவ்வளவு தூரம் உண்மைத் தன்மையுடையதாக இருக்கமுடியும்? (சிறுவர் நாடகங்கள் போட்டிக்கு நடாத்தப்படுவதைத் தவிர்த்தல் நன்மையானது என்பது பொதுவான ஒரு வேண்டுகோளாக முன்வைக்கப் படுகிறது)

போட்டி நாடகங்களின் வகைகளுக்கு ஏற்ப அந்நாடகங் களுடன் தொடர்புடையவர்கள் நடுவர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும். 'ஒரு நாடகம் எழுதியது கிடையாது, நடித்தது கிடையாது, நெறியாள்கை செய்தது கிடையாது, எப்படி இவரால் நடுவராகக் கடமைபுரிய முடியும்?' என்ற கூக்குரல்கள் போட்டி நடைபெறும் மண்டபத்திலேயே ஒலிக்க ஆரம்பித்து விடுகிறது. இதில் நிறைய வாதப்பிரதிவாதங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவ்வகையில் போட்டி அமைப்பாளர்கள் ஆற அமரச் சிந்தித்து சொல்லப்படுவது உண்மைத் தன்மைக்கு உறுதி சேர்க்கும்.

**போட்டியாளர்களும் பொறுப்பாசிரியர்களும்**

போட்டி முடிந்த கையுடன் போட்டியில் இடம்கிடைக் காத பொறுப்பாசிரியர்கள் நடுவர்களுடன் விவாதத்தில் ஈடுபடும் தன்மை வேதனைக்குரியதாகும். 'எனது நாடகத்திற்கு இந்த நடுவர் முதலாமிடம் போட்டுள்ளனர். நீங்கள் முதலிடம் போடாமைக்கு என்ன காரணங்கள் சொல்லுங்கோ?.....' இவ்வாறு அதிர்ச்சி தரும் வினாக்களை எல்லாம் நடுவர்களை நோக்கி வீசுவது உண்டு. இந்தத் தகவல் எவ்வாறு உரியவர்களுக்கு கசிகிறது. எவ்வாறு தெரிந்து கொள்கிறார்கள் என்னும் ஆய்வுக்கும் கிடைக்கும் விடைகள் வேதனைக்குரியதாகவே அமைந்து விடுகின்றது.

யதார்த்தத்திற் போட்டிகள் மாணவர்களுக்கானது. ஆனால், இடையில் உள்ளோர் தாமும் இதிற் பங்குகொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியின் நோக்கத்தையே சிதறடித்து விடுகின்றனர். மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டவேண்டிய ஆசிரியர்கள் மாணவர்களைவிட, தாம் ஒப்பாரி வைப்பதும் உண்மைக்கும் புறம்பான செய்திகளைக் கட்டவிழ்த்து விடுவதும் நடுவர்களுடன் கதைப்பதற்கும், முரண்பாடுகளை ஏற்படுத்த மாணவர்களைத் தூண்டுவதும் மிகவும் கொடுமையான செயற்பாடுகளாகும்.

மாணவர்களை ஆற்றுப்படுத்தவேண்டிய நாடகப் பொறுப்பாசிரியர்கள் போட்டி விடயங்களில் மிகவும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். எனது நாடகம் எப்போதும் முதலாவதாக வரவேண்டும். நானே நாடகத்தில் முடிசூடா மன்னன் என்றெல்லாம் எண்ணிக்கொண்டு நடுவர்களுடன் முரண்படக் கூடாது. தேசிய மட்டத்தமிழ்த்தினப் போட்டி முடிந்த கையுடன் ஒரு ஆசிரியர் கையடக்கத்தொலைபேசியில் தொடர்புகொண்டு 'ஏன் எனது நாடகத்திற்கு முதலாமிடம் கிடைக்கவில்லை?' என்று கேட்டால் இதற்கு என்ன பதிலைக் கூறுவது? 'நடுவராக கடமையாற்றிய இரண்டு பேர் பாதியில் தொலைபேசியை நிறுத்தி விட்டார்கள். தயவுசெய்து நீங்கள் நிறுத்தக்கூடாது' இதை என்னவென்று கூறுவது 'ஒப்பீட்டு ரீதியில் உமது நாடகத்திற் குரிய தீர்ப்பு சரியான முறையிலேயே கூறப்பட்டது' என்ற பதிலுக்கு 'இல்லை இல்லை நான் முதலாமிடம் பெற்ற நாடகத்தையும் பார்த்தேன். அதைவிட என்னுடையதுதான் திறம்' அதிர்ச்சியாக இருந்தது. ஏனெனில் போட்டியில் மேடையேற்றும் நாடகமொன்றை இன்னொரு பாடசாலையினர் பார்வையிடமுடியாது என்பது போட்டி அமைப்பாளர்களின் கண்டிப்பான உத்தரவு. இவற்றையெல்லாம்விட அதிர்ச்சியான விடயம் என்னவென்றால் 'இவ்வருட நாடகத்திற்கு நீங்கள் எனக்கு முதலிடம் போட்டீர்கள். ஆனால் 'ஓ' என்பவர் முதலிடம் போடவில்லை. இப்படியெல்லாம் பொறுப்பாசிரியர்கள் குழப்பமடைவது மாணவர்களைத் தவறான நடத்தைகளுக்கு இட்டுச் செல்ல வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூடிய அறையில் நாடகப் போட்டி**

'நான் இந்தப் பாடசாலையின் அதிபர் ஒரு பக்கத்தில் இருந்து பார்த்துச் செல்கிறேன்.'

'மன்னிக்கவும் பாதர் வேறு யாரையும் பார்ப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்பது உத்தரவு' நாடக நடிகர்கள் அதன் ஆசிரியர் இசையமைப்பாளர் தவிர அப் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், மற்றும் ஏனையோர் யாரும் போட்டியின் போது அந்நாடகத்தைப் பார்க்க முடியாது என்பது போட்டி அமைப் பாளர்கள் விதியாக முன்வைக்கப்படுகிறது. இதற்கு முன்பு நடைபெற்ற அனுபவங்கள், உண்மை நேர்மையில் களங்கத்தை ஏற்படுத்தியமையினால் வந்த விளைவுகளே இவை. இது சரியா? தவறா? விடை கூறுவது தர்ம சங்கடம்தான் இருப்பினும் ஒவ்வொருவருமே உண்மையாகவும் நேர்மையாகவும் நடக்கத் தவறியமையினால் ஏற்பட்ட விளைவுகளே இவை என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதை சகலதரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்றால், அது அவரவர் மனத்தூய்மை சார்ந்ததாக அமையும்.

பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டி முடிவுகளை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றோம். ஆதாரங்களையும் நேரடியாகக் கண்டு தெளிகின் றோம்.

அவ்விளையாட்டுக்கான பொதுவிதிகளைத் தெரிந்து வைத்திருப்பதாலும், முடிவுகளை ஏற்றுக்கொள்வதிற் சிக்கல்கள் இருப்பதில்லை. ஆனால், நாடகப்போட்டிகள் என்று வருகின்ற போது மூடிய அறை, இரகசிய நடுவர்கள், போட்டி நடைபெற்று முடிவுகள் வரும்வரை வெளியாருடன் (போட்டியில் பங்கு கொண்டோர்) தொடர்பு கொள்ள முடியாத பாதுகாப்புத் தன்மைகள் என்று தேவையற்ற கட்டுப்பாடுகள் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மைத்தனத்திற்குச் சவாலாகவே அமைகின்றது. ஆயினும் இப்போட்டிகளுக்கென ஒரு புதுவிதி காணவேண்டிய தேவையும் இல்லாமல் இல்லை.

"மதர் ஸ்ரீ லங்கா" எனும் தலைப்பிலான நாடகப்போட்டி ஒன்று அண்மையில் நடைபெற்றபோது, அதற்குரிய போட்டி அமைப்பாளர்கள் சுதந்திரமான முறையில் எல்லோர் முன்னிலையிலும் திறந்த வெளிப்போட்டியாகவே நடாத்தி முடித்தனர். இதன் நடுவர்களாக முஸ்லீம் இனம் சார்ந்தோர் தமிழ் தெரிந்த சிங்களவர், மற்றும் இங்குள்ள நாடகம், தமிழ்த் துறைசார்ந்தோர் நடுவர்களாகக் கடமையாற்றினர். இந்த மாவட்டத்தைச் சேர்ந்த இந்தப் பாடசாலை என்ற வெளிப்படையான அறிவிப்புடன் நாடகப் போட்டி ஆரம்பமானபோது எம்மவர் மத்தியில் இருந்து சாச்சா பாடசாலைகளிற்கு இரகசிய இலக்கம் கொடுக்கப்பட்டு மூடிய அறையில் நடாத்தப்படவேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது. அதற்கு அவ்வமைப்பாளர்கள் எட்டு மாகாணங்களில் இந்த முறையில்தான் நடத்தினோம். பிரச்சனை ஒன்றும் ஏற்படவில்லையே என்ற பதில், கருத்துத் தெரிவித்தோரைச் சிந்திக்கத் தூண்டியிருக்கலாம்.

உண்மையும், நேர்மைத்தனமும், நம்பிக்கையும், நடுநிலைமையும் இருந்தால் தனியொருவராலும் தீர்ப்புக் கூறமுடியும் என்பதை எல்லோருமே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தானெனும் பேய் கெடவே – பல
சஞ்சலக் குரங்குகள் தளைப்படவே
வானெனும் ஒளி பெறவே – நல்ல
வாய்மையிலே மதி நிலைத்திடவே
தேனெனப் பொழிந்திடுவீர்! அந்தத்
திருமகள் சினங்களைத் தீர்த்திடுவீர்
ஊனங்கள் போக்கிடுவீர்! – நல்ல
ஊக்கமும் பெருமையும் உதவிடுவீர். - பாரதி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகப்பிரதியாக்கம்

# விடுதலை

**(திரை விலகுகின்றது)** சங்கீதா நவரட்ணம்

2ம் வருடம்(விஞ்ஞானத்துறை, தமிழ்மொழிமூலம்)

**பாத்திரங்கள்:** வடிவேலு(தந்தை), காமாட்சி(தாய்), மீனா(மகள்), கணேஸ்(மகன்), அமலா, கலா (மீனாவின் தங்கையர்), வடிவு(கணேஸின் மனைவி)

(மீனாவின் தாய் தந்தையர் ஒரு பாரிசவாத நோயாளிகள். மீனாவின் அண்ணன் ஒரு ஊதாரி. அமலா, கலா ஆகியோரை மீனாவே உழைத்துப் படிப்பிக்கின்றவள்)

## காட்சி –1

**காமாட்சி:** பிள்ளை மீனா ! எடிபிள்ளை மீனா. இங்கை ஒருக்கா வாம்மா?

**மீனா :** என்னம்மா. வேலைக்கு நேரம் போட்டுது. சாறி கட்டுறன். பொறுங்கோ வாறன்.

(மீனா அவசரஅவசரமாக சாறியைக் கட்டிக்கொண்டு தாய் தந்தை படுத்திருக்கும் அறையை நோக்கி ஓடினாள்)

**மீனா :** என்னம்மா? எல்லாம் செய்திட்டுத்தானே வெளிக்கிட்டனான் இப்ப என்னணை வேணும்?

**காமாட்சி:** உந்தச் சாப்பாட்டை ஒருக்காக் கிட்ட இழுத்துத் தாவன். உதுகள் எல்லாத்தையும் கேட்டுட்டன் ஒண்டும் எடுத்துத் தராதுகளாம்.

**மீனா :** சரி சரி இந்தாங்கோ. எனக்கு வேலைக்கு நேரம் போட்டுது. நான் போட்டு வாறன்.

**மீனா :** அமலா! கமலா ஸ்கூலுக்கு நேரமாச்சுடி உங்கை என்ன செய்கிறியள்? எல்லாத்தையும் செய்து தந்தும் உங்களாலை நேரத்திற்கு ஸ்கூலுக்கு போக முடியாட்டி நான் என்ன செய்யிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கமலா ,அமலா :** இதோ வெளிக்கிட்டம் அக்கா.

(மீனா கான்பாக்கையும் தூக்கிக் கொண்டு வீட்டு வாசல் வரையும் வந்து விட்டாள்)

**கணேஸ் :** மீனா.... மீனா....

**மீனா :** என்னண்ணா?

**கணேஸ் :** சாயுங்காலம் நேரத்தோடை வீட்டுக்கு வாறியா?

**மீனா :** ஏன் அண்ணா?

**கணேஸ்:** சொன்னதைச் செய். மாலை நாலு மணிக்கெல்லாம் நீ வீட்டுக்கு வந்திடோணும்.

**மீனா :** சரியண்ணா.

## காட்சி –2

(மீனா ஒவிஸ் வேலைகளை முடித்துக் கொண்டு அண்ணன் நேரத்திற்கு வீட்டுக்கு வரச்சொன்னவரே என்று எண்ணி அவசரமாக வீட்டை அடைந்தாள்)

**கணேஸ் :** வடிவு, எடியேய் வடிவு நீ எங்கை போய்த் தொலைந் தாய்?

**வடிவு :** என்னப்பா? நான் இஞ்சைதான் நிக்கிறன் உங்களுக்கு இப்ப என்ன வேணும்.

**கணேஸ்:** மீனா வேலையாலை வந்திட்டாள் அவளை அலங்காரம் பண்ணிக் கூட்டிக்கொண்டு வா. மாப்பிள்ளை வீட்டுக்காரங்கள் வரப் போறாங்கள்.

**மீனா :** மாப்பிள்ளை வீட்டுக்காரங்களா? ஏன் அண்ணா? நான் இப்ப கலியாணம் செய்து வை எண்டு உன்னைக் கேட்டனா? எங்கடை குடும்பம் இருக்கிற நிலையிலை எனக்கு ஒரு கலியாணமா?

**கணேஸ் :** வசதியான இடம்,எங்கடை குடும்பக் கஸ்ரம் இதோடை தீரும். நானும் நல்ல வசதியாய் வாழலாம்

**மீனா :** நீ வசதியாய் வாழணும் எண்டதற்காக என்னைத் தள்ளி விடப் பாக்கிறாயா? நீ என்ன சொன்னாலும் எனக்கு கலியாணம் வேண்டாம் நீ வேணுமெண்டால் உழைத்துக் குடும்பத்தைப் பார்? அவர்கள் நல்லாக இருந்தால் நான் கலியாணம் செய்யிறன்.

(ஒரு குடிகார மாப்பிள்ளையை மீனா சொல்வதைக் கேட்காமல் அவளுக்குப் பேசி முடிவு செய்தான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி –03

*(மீனா தனது தாய் தந்தை இருக்கும் அறைக்குச் சென்று அவர்களுக்கு பணிவிடை செய்து கொண்டு உரை யாடுதல்)*

**மீனா :** அம்மா..அப்பா..என்னப்பா நித்திரையோ?

**வழுவேலு :** இல்லை அம்மா சொல்லு

**காமாட்சி:** சாப்பிட்டியேம்மா? வேலைக்குப் போய் களைத்து விழுந்து வரும் உனக்கு ஒரு பச்சத்தண்ணி கூட என்னால் எடுத்துத் தர முடியாதபடி கடவுள் எங்களை செய்திட்டாரம்மா?

**மீனா :** ஓமெணை நான் சாப்பிட்டன். வழமைபோல உன்ரை புலம்பலை ஆரம்பிக்காதை? நானே மனக் குழப்பத் திலை இருக்கிறன்.

**வழுவேலு:** என்னம்மா என்ன குழப்பம். அதைத் தீர்த்து வைக்கத்தான் எங்களாலை முடியாவிட்டாலும் உனக்கு ஆறுதல் சொல்லுகின்ற சந்தர்ப்பத்தையாவது கொடன் அம்மா.

**மீனா :** அண்ணா தன்னோட பாறுக்கு குடிக்கவாற ஒரு ஆபியராம், அந்தாளை எனக்குக் கலியாணம் செய்துவைக்கப் போறாராம் எண்டு ஒற்றைக் காலில் நிற்கிறார்? நான் எவ்வளவு சொல்லியும் கேக்க மாட்டாராம்.

**வழுவேலு,**

**காமாட்சி:** எங்களால உனக்கு ஒரு கலியாணத்தைப் பண்ணிவைக்க முடியாது எண்டதால் ஒரு குடிகார மாப்பிளைய கட்டிவைக்கப் பாக்கிறானே பாவி?

**வழுவேலு:** கூடப் பிறந்த தங்கைக்கு, அந்த வீட்டையே கட்டிக் காப்பாற்றிய அவளுக்கு, ஒரு நல்ல இடத்திலை கலியாணம் செய்து வைத்தால் குறைந்தா போடுவாய்?

**மீனா :** நான் எனக்கு கலியாணம் வேண்டாம் என நினைக்கிறன். நீ அதுக்கை வசதி, வசதியில்லா இடமெண்டு கதைக்கிறியள் பேசாமல் படுங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 04

(கணேஸ் அவசர அவசரமாக மீனாவிற்கு கலியாண ஏற்பாடு செய்தான் பெற்றோர்கள் எவ்வளவு சொல்லியும் கேட்க வில்லை)

**மீனா** : (நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு திருமணத்துக்கு முதல் நாள்) தமையனது அறைக்குச் சென்று அவன் காலில் விழுந்து கெஞ்சி, இந்தக் கலியாணத்தை நிப்பாட்டுங்கோ அண்ணா, நான் ஒருத்தரை மனசார விரும்பிறன். என்னோட வீட்டுக் கஸ்ரங்கள் முடிந்தால் என் விருப்பத்தை அவரிடம் சொல்லி அவரைத் திருமணம் செய்யப் போறன்.

**கணேஸ்** : விடிஞ்சால் கலியாணம். பேசாமல் போய்ப்படு. இந்தக் கலியாணம் மட்டும் நடக்காட்டி குடும்பத்தோடை எல்லாரையும் வெட்டிப் போட்டு நானும் ஜெயிலுக்குப் போயிடுவன்.

(மீனா பேசிப் பிரயோசனம் இல்லை என்பதால் இனிமேல் நடப்பது விதி. கஸ்ரப்படுவதே என் வாழ்க்கை என்று இந்தப் பாழாப்போன கடவுள் எழுதியிருக்கான்போல கிடக்கு என்று தனக்குள்ளே முணுமுணுத்தபடி படுக்கையில் படுத்தவளின் கண்ணில் இருந்து நீர் ஆறாக ஓடியது. ஒருவாறு நித்திரையானாள்)

## காட்சி – 05

(கோழி கூவும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து அறைக்கு வெளியே வந்த மீனா திகைத்துப் போய் நின்றாள் அவளுடைய தாயும் தந்தையும் அங்கே இறந்து கிடந்தனர். அமலா, கமலா, கணேஸ், வடிவு என்போர் அவர்களைச் சுற்றி அழுத வண்ணம் இருந்தனர்)

**மீனா** : அம்மா அப்பா என்னை விட்டுவிட்டுப் போய் விட்டீர்களே (மீனா விழுந்து விழுந்து அழுது புரண்டாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணேஸ்:** மீனா அப்பாவுக்கும் அம்மாவுக்கும் உன்ரை கலியாணத்தை நிறுத்த வழி தெரியேலையாம் எண்டு மருந்தைக் குடிச்சு இறந்து உன்ரை கலியாணத்தை நிப்பாட்டிற்றினம். நான் பாவி மீனா, அநியாயமாக அவர்களைக் கொண்டிட்டடன்

**அமலா,**

**கமலா:** அக்கா எங்களுக்கு அம்மாவும் அப்பாவும் வேணும் (மீனா அவர்களைக் கட்டி அணைத்து ஒவென்று அழுதாள்)

**கணேஸ் :** மீனா என்னை மன்னிச்சிடம்மா. நான் திருந்திற்றன் நான் இனிக் குடும்பத்தைப் பாக்கிறன். உங்களுக்கு ஒரு நல்ல அண்ணணாய் இருப்பன் அம்மா?

**மீனா, கமலா,**

**அமலா:** அண்ணா?

(கணேஸின் தோளில் எல்லோரும் சாய்ந்து அழுதனர்.)

**கணேஸ்:** மீனா உனக்கு பிடித்த அந்தப் பையனை ஊரறிய நான் உனக்கு கல்யாணம் செய்து தருவன். தங்கைகளையும் நான் வளர்த்து நல்ல இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுப்பன். இது உன் மேல சத்தியம்

(மீனாவின் தலையில் அடித்துச் சத்தியம் செய்தான். தாய் தந்தையரின் இறுதிக்கிரியைகளைச் செய்து முடித்தான்.)

**திரைக்கு பின்னிருந்து :**

மீனாவிற்கு தாய் தந்தையர் இறந்தது ஒரு இழப்பாக இருந்தாலும், அவளுக்கு அவர்கள் கடமைகளைச் செய்வதில் இருந்து விடுதலை கிடைத்தது. அத்தோடு அவள் வாழ்வுக்கும் ஒளி கிடைக்கின்றது.

(திரை மூடப்படுகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஏழைக் குடிலில்...

அபிராமி விக்னேஸ்வரன்
2ம் வருடம்(விஞ்ஞானத்துறை, தமிழ்மொழிமூலம்)

அழகாக ரம்மியமாக அமைந்த வயல்வெளி அதன் நடுவே அவ்வழகுக்கு அழகு சேர்க்க மேல் உயர அமைந்த கோபுரத்துடன் அமைந்த கோவில் அன்று அக் கோவில் திருவிழா. கோயிலைக் கும்பிட பக்தர்கள் ஆர்வம் காட்டினார்களோ இல்லையோ தம்மை அலங்கரித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டினார்கள். இவ்வளவு ஆரவாரங்களின் நடுவேயும் கோவிலுக்கு அண்மையில்............ ஆம் கிளிசல்கள் நிறைந்த ஓலை வேலி. வறட்சியுடன் தோன்றும் குடில் அதன் முன்னே நிம்மதியை தொலைத்துவிட்டு தூரத்தை வெறித்தபடி நின்று கொண்டிருந்தாள் பார்வதி அவளது கண்களில் ஆயிரக்கணக்கான கேள்விகளுக்கு விடை தெரியாத புதிர் போன்று அந்தக் கண்களில் ஆழ்ந்த வலி. வறட்சியால் வெளிறிய இழை போன்று நரைத்த சாறியின் நடுவே கிளிசல்கள். அக்கிளிசல்களை பல வர்ண துணி கொண்டு பொருத்தல்கள் நெடிய உடம்புடன் வானத்தையே வெறித்த படி பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

இன்றைக்கு இவளது பலத்த யோசனைக்கு காரணம் அந்த கோவில் திருவிழா அவளது ஐந்தே வயதான பிள்ளையின் வேண்டுகோளை அந்த ஏழைத்தாயால் நிறைவேற்ற முடியாத சூழல். காலையிலே திருவிழா என்று ஊரே அல்லோல கல்லோலப்பட்டு ஆயத்தம் செய்து கொண்டிருந்தது ஆனால் இவள் வீட்டில் பொழுதே ஏழு மணிக்குத்தான் விடிந்தது. அங்கு அவளுக்கு எந்த ஒரு வேலையும் இருக்கவில்லை. காரணம் அந்த ஏழைக்குடிலை அலங்கரிக்க ஓர் கிழிந்த பாயும் ஒன்றிரண்டு பாத்திரங்களும் கூழ் குடிக்கும் ஒன்றிரண்டு சிரட்டைகளும் மட்டுமே இருந்தன. அதனால் எழுந்து என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது தான் ஓர் பிஞ்சு விரல் அவளை உலுப்பியது. திடீரென யோசனையில் இருந்து மீண்டவளாய் என்னம்மா என தன் ஆசை மகள் தனக்கென இருக்கும் ஒரே ஒரு சொத்தான மகள் மீது கனிந்த பார்வையை செலுத்தினாள். அப்பொழுது தான் அந்த பால் முகம் மாறாப் பிஞ்சு தன் மழலை மொழியால் "அம்மா அம்மா நானும் கோவிலுக்கு போப்போறன் நானும் கோவிலுக்குப் போப்போறன் பக்கத்து வீட்டில அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டி காப்பு, சங்கிலியெல்லாம் போட்டுக்கிட்டு போறாள் எனக்கும் போட்டு விடு நானும் கோவிலுக்கு போப்போறன்". தாயும் பாரா முகம் கண்டு சிறு அழுகையுடனே கூறி முடித்தது. தனது ஒரே பிஞ்சுக் குழந்தையும் ஆசையை நிறைவேற்ற முடியவில்லையே என்று போடக் கூட ஒழுங்கான உடுப்பு இல்லை இதற்குள் காப்பு, சங்கிலி. அது பிஞ்சு மனம். கஸ்டம் அறியாது அது விரும்பியதைக் கேட்கும். ஆனால், என் நிலையே ஒரு வேளைச் சாப்பாடு இல்லை. கூழ் கூட குடிக்க முடியாத நிலையாச்சே அவளது தாய் மனம் ஊமைக் கண்ணீர் வடித்தது. குழந்தையோ பழைய ரேப்றக்கோடர் போல சென்னதையே திருப்பித் திருப்பி நான் கோவிலுக்கு போப்போறன் என்று அழுதவாறே கூறிக் கொண்டு இருந்தது. இதனைத் தாங்கமுடியாத தாய் வெளிச் சென்றுவிடக் குழந்தையின் குரல் காற்றுடன் கலந்தது.

பார்வதி தன் நிலைமை எண்ணி யோசித்தவாறே தன் கடந்த காலத்தை நோக்கிச் செல்கிறாள். அழகிய தோப்புக்களும் வயல்களும் இயற்கை எழில் கொஞ்சும் பக்தி மயமான மூதூர் தான் அவளது பிறப்பிடம். செல்வச் செழிப்புடன் சிங்காரமாக அவ் வீட்டில் கடைக்குட்டியாகப் பிறந்தவள்தான் பார்வதி. அவள் கேட்பதெல்லாம் அவளுக்கு அடுத்த நொடியில் கிடைத்துவிடும். இவற்றை விட அக்குடும்பத்தில் பாசத்திற்குப் பஞ்சமில்லை. இல்லை என்று வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாது வாரி வழங்கும் குடும்பம். அவளது அவ்வளவு சிறந்த மனமும் ஈகை குணமும் கொண்ட குடும்பத்தில் அவள் மிகவும் சிறந்த பண்புடனும் ஒழுக்கத்துடனும் மகிழ்வுடனும் வாழ்ந்து வந்தாள். அவள் உரிய பருவம் எய்தியதும் அதே ஊரைச் சேர்ந்த ராஜனுக்கும் சீரும் சிறப்புமாக ஒரு குறைவுமில்லாது திருமணத்தை நிகழ்த்தி வைத்தனர் அவள் பெற்றோர்.

திருமண வாழ்வு மகிழ்ச்சியாக கழிய அவர்களுக்கு இனியா என்ற மகள் பிறந்தாள். மூவரும் சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்கையில் போர்க் கொடுமையால் அவளது தகப்பனார் குடும்பமே அழிக்கப்பட்டது. அந்தக் கொடுமையான செய்தியைக் கேட்டுத் தாங்கமுடியாது இருந்த பார்வதிக்கு இடிக்கு மேல் பேரிடியாய் அவளது கணவன் ராஜன் துவக்குச் சூட்டிற்கு இலக்காகி இறந்த செய்தி வந்து சேர்ந்தது. வாழ்க்கையையே இழந்த அவள் தனக்கு வாழ்க்கையே இல்லை என்று முடிவிற்கு வந்து தற்கொலை செய்ய எண்ணிச் சென்றபோது குழந்தை முகம் அவளைத் தடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்துடன் கூட்டமாகப் பிணக் குவியல்களையும் ஓலங்களையும், அழுகுரல்களையும் தாண்டிவந்த அவளின் சொத்து அவள் இடுப்பில் இருந்த மகள் இனியாதான். இராணுவக் கொடுமைகளையும், முகாம்களில் இருந்த கஷ்டங்களையும் அந்தச் சிறு குழந்தையுடன் அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வாழ்க்கையில் உச்சக்கட்ட விரக்தியுடன் இருந்த அவளுக்கு தூண்டில்போல் விடுதலை கிடைக்க அவள் தன் காதில் இருந்த தோட்டை விற்று அநாதரவாக இருந்த வளவில் கோவிலுக்கு அருகாமையில் ஒரு சிறு குடிசைபோட்டுத் தங்கினாள். வீட்டு வேலைக்காக ஒவ்வொரு வீடு வீடாக ஏறி இறங்கிய போதும் பல்வேறு காரணங்களைக் கூறி அவளுக்கு வேலை தர மறுத்து விட்டார்கள். இதனால் ஒருவேளை உணவு உண்ணக்கூட வழியில்லாது கோவிலிற் கொடுக்கும் அன்னதானங்களை உண்டு உயிர் வாழ்ந்தார்கள்.

இவளின் இந்தப் பரிதாபகரமான நிலைகண்டு ஆலய தர்மகர்த்தா கோவிலை சுத்தம்செய்யும் வேலை கொடுத்து அவளுக்குச் சிறுதொகையை சம்பளமாகக் கொடுத்தார். அவள் அதைக் கொண்டே கூழ் காய்ச்சி பிள்ளைக்கும் கொடுத்துத் தானும் உண்டு இவ்வளவு காலமும் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறாள். அவளது சம்பளம் தினம் கூழுக்கே சரியாய் இருக்கும் நிலையில் எப்படித் தனது குழந்தைக்குப் பட்டு உடை உடுத்தி, வளையல் இட்டு அழகு பார்க்க முடியும். யோசித்தவள் கையை ஓர் பிஞ்சுக்கரம் தட்டியது. திரும்பிப் பார்த்தால் அவளது மகள்தான். அழுத தாயின் முகம் கண்டு பதறிய அந்த பிஞ்சு "அம்மா நான் கோவில் போகேலை நீ அழாதையம்மா". குழந்தையினை வாரி அணைத்த பார்வதி கண்ணீரைத் துடைத்துக்கொண்டே நாம இங்கே இருந்தே பார்ப்பம் என்று கூற, தங்க நகை அலங்காரத் துடன் சுவாமியும் தேரிலிருந்து செல்ல, பட்டு ஆடைகளுடன் ஆடம்பரமாகப் பக்தர் படையும் புடைசூழ, இவர்களைத் தாண்டியும் இவர்கள் குடிலைத் தாண்டியும் தேர் சென்று கொண்டிருந்தது.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை திறந்தது........

சி.பாரதி
2ஆம் வருடம் ஆங்கிலத்துறை

முகாரி ஓசையும்,
குருதி வாடையுமாய்,
கோர சாக்கடைக்குள்
மரண மிரட்டல்களோடு - மனிதம்
மருண்டபடி அமர்ந்திருக்க,
சிதைக்கப்பட்ட சுயமும்
செத்தொழிந்துபோன சுதந்திரமும்
ரணவேதனையில் முனகும்
ஒப்பாரி வரவேற்போடு,
மெல்லென திறந்தது பாதை
விடிவு நோக்கி....
கோரஅணிவகுப்பில் சிதைந்த தேசத்தில்
சில்லெனப் பன்னீர்த் துளிகள்!
முடிந்து விட்ட முகாரியின்
மூச்சுத்திணறுதலில் புது வசந்தம்!
மொட்டவிழ்ந்து,
புதிதாய் ஜனனித்த,
பூவாய் இதழ்விரிந்து,
எதிர்காலத்தில் இன்ப நிகழ்வுகளுக்காய்
முன்னேற்ற ஏணிதேடி...
அடிக்கனி விடுத்து நுனிக்கனி பழுக்கும்
ஓரவஞ்சனைகள் இனியில்லை,
முன்னேற்றம் என்பதே முழுமூச்சு
இறந்த காலத்தில் ரணங்களே
இனி,
வெற்றிக் கேடயங்களின் விளைநிலங்கள்!
விடிவெள்ளிக்கு வெளிச்சம் தேவையா?
எங்கள் வெற்றிக்கிரீடத்தில் கிள்ளிக் கொடுப்போம்!
இறுதியாய் ஒன்று,
எங்கள் விடிவுப் பாதைக்கு - இனி
பூட்டுக்கள் தேவையில்லை
தொலைத்து விடுங்கள்
திறப்புக்கள் மட்டுமே போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய உலகில் எதிர் கொள்ளவிருக்கும் சவால்கள்...

நாளைய உலகம்? கற்பனை கலந்த ஒரு அலசல். அடி மனதில் அடிக்கடி அரங்கமேறுகிறது. எண்ண ஓட்டங்களின் அத்திவாரத்தில் ஒரு அபாய அறிவிப்பாய் ஒரு அச்சுறுத்தலாய் ஒரு இனம் புரியாத கலக்கம் நாளைய உலகில் நாம் எதிர் கொள்ளவிருக்கும் சவால்கள் எவை? நாம் சந்தித்த உலகம் , இப்போது சந்திக்கின்ற உலகம் என்று எம்மோடு கைகுலுக்கிய உலகை கைகுலுக்குகின்ற உலகைத்தாண்டி பாரிய எதிர் பார்ப்புகளோடு புதுமை நிறைந்ததாக அமையப் போகிறது நாளைய உலகம் அங்கே எமக்காக சாதகமானவைகளா? இல்லை சவால்களா? காத்திருக்கின்றன. புரியாத புதிரோடு எனது எண்ண அலையோடு இரண்டறக் கலக்கின்றேன்.

நவீன யுகம் என்ற பாரிய பிரமிக்கத்தக்க வளர்ச்சி கண்ட உலகம் நாளை தனது படிப்படியான முன்னேற்றப் பாதையின் உச்சிப்படியில் ஏறப் போகின்றன. அங்கே விஞ்ஞானம் செய்யும் அபரிமிதக்காரணிகளின் உச்சப் பயன்பாட்டோடு அதன் பின் விளைவுகளும் கோரமுகத்தோடு எம்மை அணுகப் போகின்றன. பாரம்பரிய மாறுதல்களோடு மனிதம் புனையும் விஞ்ஞானம் நாளை மீத்திறன் கூடிய சந்ததியை எமக்காக பரிசளிக்கப் போகிறது. அவர்களின் மிகையான ஆற்றல்கள் மனித நடத்தையில் இருந்து பிறந்து எமக்கு எதிராக மாறக்கூடும் இது கற்பனைதான் ஆனால் நடக்கமாட்டாதென்பதற்கு சான்றுகள் இல்லை சூழல் என்ற கருப்பொருளை உற்று நோக்கினால் தன் கட்டுக் கோப்பினை இழந்த நிலை குலைந்த சின்னாபின்னமாய் மாறிக்கொண்டிருக்கும் இன்றைய நிலையில் இருந்து நாளைய சூழலின் நிலையைக் கணிப்பிட்டால் "பள்ளத்தாக்கில் இருந்து பாதாளத்தில் விழும் நிலைக்கு ஒப்பிடலாம்" . சூழல் மாசடைதலின் உக்கிர தாண்டவம் நாளைய உலகின் சவால்களில் தலையாயது எனலாம். புவிக் கோளம் வெப்பமடைவதால் துடித்துக் கொண்டிருக்கும் பூமி நாளை பொசுங்கிப்போனாலும் ஆச்சரியமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாற்றத்தின் காணிக்கையாக பூமியை திண்டாட வைக்கும் கொடிய வியாதிகளின் கோரக் கைப்பற்றலுக்குள் நாளைய பூமி நிச்சயம் மூச்சுத் திணறப் போகின்றது. சூழலில் ஏற்படும் தகாத மாற்றங்களால் இப்போதே பொங்கி ஆத்திரப் படும் பூமியும் கடலும் நாளை பொறுக்க முடியாது வெடிக்கப் போகின்றன.

புவியியல் தொடர்பான பிரச்சினைகளைச் சற்றுத் தள்ளி வைத்து மானிடவியலோடு ஆராய்வோம் என்றால் இந்த புதிது புதிதாய் முளைக்கும் அணுகுண்டு ஆராட்சிகள் எதையோ அதிராமல் அச்சுறுத்துகின்றன. ஆராட்சியின் முடிவில் வெள்ளோட்டங்கள் நாளையா?

அவசர அவசரமாக அனுப்பப்படும் விண்வெளி ஆராட்சிக் கப்பல்கள் நாளை வேற்றுக் கிரக வாசிகளையும் கூட்டி வரலாம் புதுச் சொந்தங்களோடு சிக்கலும் முளைக்கலாம்.

அதுமட்டுமா? புதிது புதிதாக புத்தீசல் போல வெளிவரும் நோய்களின் பயங்கரமும் நாளைய உலகை பயங்கர எதிர் காலத்தை ஞாபகப்படுத்துகின்றன. கலாசார சீரழிவு என்ற போர்வைக்குள் ஆண், பெண் என்ற கட்டுக்கோப்புக்குலைந்து ஆண் - ஆண், பெண்- பெண் ஆகி நாளை நாய் - மனிதன், மனிதன் - றோபோ ......?

வீட்டு வாசலில் வந்து நிற்கும் விஞ்ஞான உலகம் வில்லங்கத்துக்கும் வழிவகுக்கலாம். கந்தகக் காற்றோடு நுரையீரல் கைகுலுக்கி சேதன, அசேதனப் பதார்த்தங்களைக் கலந்த தண்ணீரில் உயிர் வாழப் போகும் மனித வாழ்க்கை பத்து வயதுக்குள்ளேயே முதுமையை எட்டலாம் பதினைந்து வயதில் முற்றுப் புள்ளியோடு முடிந்தும் விடலாம்.

ஆனால் இன்னும் ஒரு வகையில் விஞ்ஞானம் ஆயுட்கால நீடிப்பில் கை வைத்திருக்கும் விளைவாய் சனத்தொகைப் பெருக்கமும் பாரிய சவாலாய் பயமுறுத்துகின்றது. நாளைய உலகில் சந்து பொந்துகள் எல்லாம் மனிதத் தலைகளோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சுத்திணறப் போகின்றது. சனத்தொகைப் பெருக்கத்தின் சாணைகளாக வளப்பற்றாக்குறையும் சூழல் சிதைவும் நோய்களின் கோரத் தாண்டவமும் வறுமையின் கோரமும் நாளைய உலகை மூழ்கடிக்கப் போகின்றன.

நாளை என்ற காலவோட்டத்தில் உலகின் நிலையில் நாம் மொத்தமாக ஒரு பயங்கரம் நிறைந்த மீட்க முடியாத அவலத்தினுள் அமிழ்ந்துபோன ஒரு பரிதாபமான உலகையே காணமுடிகின்ற போது நிச்சயமாக எமது நாளைய உலகின் நகர்வுகள் சவால்களின் வரவேற்பறைக்குத்தான் காத்திருக்கின்றன. இந்த சவால்களை வெற்றி கொள்ள அவற்றை எமக்கு சாதகமாக்கிக் கொள்ள நாம் செய்ய வேண்டிய விடயங்களை நோக்கி ஆராய்ந்தால் ஒன்றைக் கூறலாம் மனிதர்கள் தங்களை மாற்றிக்கொள்ளுதல் வேண்டும் இன்று நமக்காக மட்டும் வாழாது உலகிற்காகவும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும் நாளைய உலகம் நோக்கிய நகர்வுகளில் நீண்ட காலவளர்ச்சிநோக்கிய திசைப்படுத்தல்கள் அவசியப் படுகின்றன.

எனவே நாளைய உலகில் நாம் எதிர் கொள்ளவிருக்கும் சவால்கள் ஒவ்வொன்றிற்கும் நாமே சவால்களாய் விளங்கி வெற்றியோடு எதிர் கொண்டு நாளைய உலகை வெற்றிகரமான இன்பம் நிறைந்த பொக்கிசமாய் மாற்றியமைப்போம். வாரீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கே அடங்கு

டிலக்ஷா சண்முகராஜா
1ம் வருடம் (ஆங்கிலம்)

*(அழகான அமைதியானது தேனுவின் குடும்பம், அம்மா-கமலா, அப்பா-பிரபாகர், பாட்டி- லட்சுமி, தம்பி- சதுர் என ஐந்து அங்கத்தவர்களைக் கொண்டு உழைத்து நிம்மதியாக வாழும் நடுத்தரக் குடும்பம். தேனு வழமைபோல தனது பல்கலைக்கழக மதிய உணவு இடைவேளைக்கு வீட்டுக்கு வந்தாள்.)*

**தேனு** : அம்மா அம்மா பசிக்குது சாப்பாடு போடுங்கோ

**கமலா** : வீட்டுக்குள்ள வா எத்தின தரம் உனக்குச் சொல்லி யிருக்கிறன் கேற்றில் இருந்து கத்திற்று வராத எண்டு உன்ர சாப்பாட்ட யாருக்கம்மா குடுக்கப் போறன்

**பிரபாகர்** : ஏண்டி பிள்ள பசியோட வருகுது சாப்பாட்டை குடுக்கிறத விட்டுட்டு புலம்புற

**தேனு** : ஓம் அப்பா இந்த அம்மா எப்பவும் இப்படித்தான் இவா இப்ப கத்தின நேரத்துக்குள்ள சாப்பாட்டப் போட்டுத் தந்திருக்கலாம் *(என்றபடியே உணவருந் தும் மேசையில் அமர்ந்தாள்)*

**கமலா** : உனக்கு சாப்பாட்டப் போட்டுத்தான் வைச்சிருக்கிறன் நீ திருந்தணும் எண்டுதான் சொன்னன் *( என்று கூறிய படி சமையல் அறையில் இருந்து வெளிப்பட்ட கமலா உணவருந்தும் மேசையில் இருந்த மகளுக்கு உணவுத் தட்டைக் கொடுத்தாள்.*

**தேனு** : *(சாப்பாட்டுத் தட்டையும் தாயையும் ஒருமுறை பார்த்து விட்டு )* அப்பா இவாவ பாருங்கோ தன்ர மகளுக்குப் பிடித்த சாப்பாட்ட சமைச்சிருக்கா எனக்கு இது வேணாம்

**பிரபாகர்:** அம்மா! தேனு தம்பிக்கு இப்பதானே காய்ச்சல் மாறினது அதனால் அவனுக்குப் பிடிச்ச சாப்பாட்ட சமைச்சா இண்டைக்கு சாப்பிடன் அப்பாவுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேனு :** உங்களுக்காக சாப்பிடுறன் இரவு எனக்குப் பிடிச்ச சாப்பாடுதான் வேணும் சரியா (பிரபாகர் சரி எனத் தலையசைத்து மகளின் தலையை இனிதாக தடவிவிட்டுச் செல்ல பாட்டி உணவை உருளையாக்கி ஊட்டிவிட்டாள். உணவை பாட்டியின் பாசத்தோடு உண்டு விட்டு அவசர அவசரமாக பல்கலைக் கழகம் நோக்கி இருசக்கர வண்டியில் பிரயாணமானாள்)

அப்பாடா இப்பதான் புயலடிச்சு ஓஞ்சது போல் வீடும் காணப்பட்டது. புயல் அடிச்சு ஓஞ்சு விட்டது இனிப் பூகம்பம் வரப்போகிறதே என்ற வாட்டம் கமலாவில் தென்பட்டது. அவள் மகன் தான் அந்த பூகம்பம் வந்ததும் வராததுமாய் பள்ளியில் நடந்த அனைத்தையும் ஊர் கேட்கச் சொல்லி விட்டுத்தான் மறுவேலை.

பொறுமையில் அவன் பூமாதேவியை விஞ்சினவன் தைரியசாலி படிப்பிலும் விளையாட்டிலும் படு சுட்டி வைத்தியன் கனவு அவனுக்கு பள்ளிச் சீருடையில் முதுகில் அவன் சுமையாக நினைக்காத புத்தகச் சுமை துவிச்சக்கர வண்டிச் சத்தம் வீட்டு வாசல் திறக்கும் சத்தம் கேட்கிறது வந்து விட்டான் சதுர்.

**சதுர் :** அம்மா அம்மா வெளிய வாருங்கோ (என்றபடி துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு போட்டிக்கோவில் போட்டிருந்த கதிரையில் அமர்ந்தான்)

என்னையா வந்து சாப்பிடன் மருந்து குடிக்க வேணுமல்லோ என்றபடி கமலா முன் வாசலைக் கடந்து போட்டிக்கோவை அடைந்தாள்.

**சதுர் :** இல்லை அம்மா ஒரே ஒரு கதை கேளுங்களன்.

எனக்கு காய்ச்சல் வரமுந்தி, அதுதான் காய்ச்சல் வந்தண்டு கணிதத்தில ஒரு கஸ்ரமான ரெஸ் செய்த நான் என்னமாதிரி மாக்ஸ் வருதோ தெரியாது எண்டனானில்லா அதுக்கு எனக்கு தான் கையஸ். மிஸ் என்னை கெட்டிக்காரன் ஓயலில் 9ஏ எடுப்பனாம். அப்படியே படிக்கட்டாம். இன்னும் இரண்டு மாசம் தானே இருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்டா என சுருங்கக் கூறி முடிக்கையில் அவன் முகமும் தாய் முகமும் அன்றலர்ந்த செந்தாமரை போல் மலர்ந்தன.

நீ கெட்டிக்காரன் எண்டது எல்லாருக்கும் தெரியும்தானே வா வந்து சாப்பிடு. உனக்குப் பிடித்த உருளைக்கிழங்கு குழம்பும் பாகக்காய்ப் பொரியலும் கீரைக் கறியும் பருப்பும் கத்தரிக்காய்ப் பால்க் கறியும் வைச்சிருக்கிறன் என்றபடி சமையலறைக்குச் செல்ல சதுர் கை, கால் கழுவி வீட்டுக்காற்சட்டையுடன் வந்து சாப்பிட்டுட்டுப் போனான்.பின் சிறிது நேரம் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தான்.

**பாட்டி** : (அந்த வழியால் வந்த லட்சுமி பேரனைக் கண்டதும் போய் தடவி விட்டு) தம்பி காய்ச்சல் இப்பவும் காயுதோ? மருந்து குடிச்சனியோ (என்றாள்)

**சதுர்** : ஓம் ஆச்சி குடிச்சனான். காய்ச்சல் விட்டுட்டு. பேசாம இருந்து இந்தப் படத்தைப் பாருங்களன். (என்றான்) இந்த உரையாடலைக் கேட்டபடி வந்த தேனு தம்பியின் அருகிலிருந்து அவனுக்கு காய்ச்சல் காயுதா என்று பார்த்தபடி.

தேனு : டேய் சது உன்ர Blood test பண்ண இண்டைக் கெல்லாம் எடுக்க வரச் சொன்னவை போய்ட்டு வந்தனியா.

**சதுர்** : ஐயோ! அக்கா அத நான் மறந்திட்டன். அப்பாவுக்கு போன் பண்ணுவம் எடுத்திட்டு வரச்சொல்லி (என்றபடி கையடக்கதொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்த முயற்சித்தான். அப்போது அங்கு வந்த கமலா)

**கமலா** : தம்பி அப்பாக்கோ போன் பண்ணுறாய் அவர் இண்டைக்கு வர Late ஆகுமே பேசாம தேனு நீயே போய்ட்டு வாவன் (என்றாள்)

**தேனு** : என்னம்மா இப்பத்தானே வந்தனான்.

**பாட்டி** : தேனு உன்ர சிநேகிதி பிரியா வந்தாள் உன்னை தங்கட வீட்ட வரட்டாம் அவசரம் எண்டவள் மறந்துட்டன் பிள்ளை (என்றாள்)

**தேனு** : தம்பி வெளிக்கிடன் உன்னை hospital ல் விட்டுட்டு பிரியா வீட்ட போட்டுவாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதுர்** : இல்லடி நீ பிரியா அக்கா வீட்டை போ இப்ப எனக்கு காய்ச்சல் இல்லைத்தானே. பிறகு என்னத்துக்கு Blood test பேசாம விடு திருப்பி வந்தா பாப்பம். நான் படுக்க போறன். (என்று கூறியபடி தன்படுக்கை அறைக்குச் சென்று தலையணையை அணைத்தபடி உறங்க தேனு தனது அறைக்குச் சென்று அலங்கரித்து பிரியா வீட்டுக்கு புறப்பட்டாள். கமலா தேனீரைக் கொடுக்க குடித்துவிட்டு வண்டியினை முடுக்கினாள் தேனு. bye அம்மா போட்டு வாறன் கிழவி.

**லட்சுமி** : கவனம் புள்ளை எல்லா சாமானும் எடுத்துட்டதானே பொலிஸ்காரன் வழியில் நிப்பான்.

**தேனு** : எல்லாம் இருக்கு பாட்டி (அம்மா கேற்றை திறந்து விட பிரியா வீட்டுக்கு போனாள்.)

போனவள் திரும்பி ஐந்தரைக்கெல்லாம் வந்து விட்டாள். கமலா இரவுச்சாப்பாட்டைத் தயாரிக்க பாட்டி உதவி செய்து கொண்டு இருந்தாள். இருவரும் அவள் முகத்தில் இருந்த கலவரத்தை கண்டறிய வில்லை.

**தேனு** : (வந்தவள்) அம்மா டெங்கு காய்ச்சல் பரவுதாம். எங்கட பிரியான்ட சித்தின்ட மகன் செத்துட்டா னாம். மூன்று நாள் காய்ச்சலாம். நுளம்பு குத்திவருகு தாம். ஒருக்கா தம்பிக்கும் Blood test பண்ணினால் நல்லம்.(என்றாள்)

**கமலா** : அவனுக்கு டெங்கு இல்ல எண்டு டொக்ரேர்ஸ் சொன்னவைதானே. பிறகென்ன நாளைக்கு பின்னேரம் test பண்ணுவம் அவனுக்கு இப்ப காய்ச்சல் இல்லைத்தானே. (புயலுக்கு முன் அமைதி என்பார்களே அதே தான் சதுருக்கும்.)

**தேனு** : அம்மா தம்பி இன்னும் எழும்பேலயோ. எழுப்பினீங் களா அவனை (என்டபடி சமையலறைக்குள் சென்றாள்)

**கமலா** : இல்லையடி இனித்தான் எழுப்ப போறன்.

**தேனு** : நான் எழுப்புறன். (என்றபடி தேனு தம்பியின் அறைக்குள் போனாள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேனு** : தம்பி ! தம்பி ! எழும்பன். படிக்கோனுமல்லா. (சதுர் எந்த அசைவுமின்றி கிடந்தான். மகனை திரும்ப திரும்ப தட்டினாள். எழும்பவே இல்லை. உடல் முழுவதும் குளிர்ந்து போய் இருந்தது. நிலைமையை உணர்ந்த தேனு தம்பியின் சுவாசத்தை சோதித்தாள். அது நின்று ஓரிரு மணி நேரமாகியதை உணர்த்தியது.)

**தேனு** : அம்மா (என்று ஊரே அதிரும்படி கத்தினாள்.)

**கமலா** : ஏன்டி இந்த காட்டுக்கத்தல் கத்துறாய் (என்றபடி அறைக்குள் வந்தாள். தாயைக்கண்ட தேனு)

**தேனு** : அம்மா இங்க தம்பி...... (என்றபடி மூலையில் அமர்ந்தாள். கமலாவோ மகன் தன்னைப் பிரிந்ததை அறிய சிறு மணித்துளிகள் எடுத்தன. மூர்ச்சையாகி நிலத்தில் சரிந்தாள். கலகலப்பாக இருந்த வீடு கவலையில் தோய்ந்தது. தன் நிலையறிந்த தேனு தந்தைக்கும் உறவினருக்கும் செய்தியைக் கூறினாள்.)

அடுத்த நாள் வீடே மயானமானது. வைத்திய அதிகாரிகள் பிரேத பரிசோதனை முடிவாக சதுருக்கு டெங்கு நோய் இருப்பதை தெரிவித்து அவனது உடமைகளை எரிக்குமாறு உத்தரவிட்டனர். எல்லாவற்றையும் எரித்தனர். அவன் புத்தகங்களையும் நினைவு களையும் எரிக்க முடியாதவராய் இன்றும் அழுதபடி 2.30 க்கு கேற்றைப் பார்த்தபடி உள்ளாள் கமலா மகன் வருவான் என்ற எதிர்பார்ப்புடன் மன நோயாளியாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்மினி விளக்கு

அந்த கறுத்த வானம் தன் கண்ணீர் துளிகளை மண்ணிற்குள் அனுப்பிக்கொண்டிருந்தது. அவளும் அப்படித்தான். வானத்தின் கண்ணீரைக் காற்றுத் துடைக்க எத்தனித்து தோற்றுப்போன வேளையில் இடியாய் இயலாமையை வெளிப்படுத்தியது. அவளின் உள்ளமும் உடலும் சோர்ந்து எதையோ பறிகொடுத்தவள் போல் ஒரு சூனியப்பார்வையை மட்டும் பரிசளித்துக் கொண்டு தனியே மழையின் சிதறல்களை ஓர் சிலையாய் சமைந்து பார்க்கிறாள். அவளின் எண்ண அலைகள் ஒரு சுனாமியையே தோற்கடிக்கத் தக்கது. அவள் பெயர் சீதா. ஆம்...... உண்மை தான். பெயரைப் போலவே அவளும் ஒரு அழகான தேவதை. ஆனால் காலக் கொடூரன் அவளின் வாழ்க்கையை சின்னாபின்னப்படுத்தி விட்டான். யாரைக் குற்றம் சொல்வது? எல்லாவற்றிற்கும் ஒருவனே காரணம் அவன் தான் அவளைப் படைத்த இறைவன். தாயின் கருவறை திறந்து தான் இமை விளக்கை எரிக்கையில் தன் தாயின் உயிரை பறிகொடுத்த பேதை, பச்சைக் குழந்தை இவள் தாய் பாசத்திற்காய் ஏங்குகையில் சுற்றத்தாரின் தூண்டுகையால் அவளின் அப்பா மறுமணம் செய்துகொண்டார். வாழ்க்கை எனும் சில்லு மேடு பள்ளம் கடக்க 18 வருடமானது. சீதா ஒரு அழகான தேவதையாய் மின்னினாள். அவளின் வளர்ப்பு அன்னைக்கு இரண்டு பெண் குழந்தைகள் அவர்களும் வளர்ந்தனர்.

**நாட்கள் கடக்க.........**

சித்தியின் கொடுமைகள் தாளாமல் புழுங்குகிறாள் தனிமையில். வேறு என்ன செய்வது அது ஒரு காலைப் பொழுது சூரியன் சோம்பல் கொண்டு இன்னமும் மேகக் கம்பளத்தில் துயில்கிறான். மணி 4.00 ஆக இருக்கும். குளிரில் இழுத்துப் போர்த்திக்கொண்டு நித்திரை கொள்கிறாள் சீதா. அன்று அவளுக்கு கா.பொ.த உயர்தர பரீட்சை. 'ஏய்.....ஏய்..... சீதா! எழும்பு! , என்னடி இவ்வளவு நேரத் தூக்கம்? ..... சீக்கிரம் எழும்பி எல்லா வேலையும் செய்!'அனலாய் வந்தது. அவள் சித்தியின் குரல் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வது என்று தெரியாமல் எழுந்து தன் வேலைகளைச் செய்யத் தொடங்குகிறாள்.

வேலைகள் முடிந்ததும், பரீட்சைக்குத் தயாராகி தன் சித்தியிடம் ஆசி பெற முகத்தில் சந்தோசத்துடன் சென்றவளுக்கு கிடைத்த பதில் 'நீ இப்ப படிச்சு என்னத்தக் கிழிக்கப் போறா? ஏதோ உன்ட அப்பன் கேட்டான் என்று உன்ன விடுரன் போ.. போ' கலங்கிய கண்களுடன் தன் தாயின் படத்திற்குமுன்னால் வந்து அழுகிறாள். அன்னையின் ஆசிர்வாதம் கிடைத்தது. படத்திற்குச் சாத்திய பூ கீழே விழுந்ததால். பரீட்சையும் இனிதே நிறைவடைய, பெறுபேறிற்காய் காத்திருந்தாள்.

பரீட்சைப் பெறுபேறுகள் கால ஓட்டத்தில் பேரூந்தாய் தயங்கித் தயங்கி வந்து சேர்ந்தது. இவள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டாள். அவளின் அப்பா சந்தோசப்பட்டார். பாவம் தன் இரண்டாம் தார மனைவிக்கு தலையாட்டி பொம்மையாய் இருந்து கொண்டு தன் நிலையை எடுத்து கூற முடியாமல் தவிக்கும் ஒருதகப்பன். சீதாவின் ஆசையோ எப்படியாவது பல்கலைக்கழகம் முடிப்பது என்று ஆனாலும் அவளின் சித்தியின் கொடுமையால் அதுவும் கைவிட்டுப் போனது. தன் நிலையை தன் தந்தையிடம் சொன்னாள். 'அப்பா! நான் எப்படியாவது யுனிவசிட்டிக்குப் போகணும்! சித்திட்ட கேட்டன் அவ போக வேணாம் எண்டு சொல்றா. நீங்க எப்படியாகக் கேட்டு சம்மதம் வாங்கித்தாங்களேன்!' அவளின் ஆசைகள் நிராசயாய் போயின. கனவுகள் எல்லாம் கலைத்தெறியப்பட்டன.

நாட்கள் கட்டிய கூடுகள் மாதங்களாயின.... 2 மாதங் களுக்குப் பின் அவளின் சித்தியின் சித்திரவதைகள் எல்லையில்லாமல் நீண்டன. அன்றொருநாள் அவளின் அப்பா "பிள்ள, இந்த கவர்ல ஒரு அப்பிளிக்கேசன் இருக்கு அத நிரப்பி உங்க சித்திக்குத் தெரியாம போடு" என்று சொன்னார். இவளும் அந்தக் கவரைத் திறந்தாள். அதற்குள் இருப்பது புது உலகிற்கான சாவி அதாவது கல்வியியற்கல்லூரிக்கான விண்ணப்பப்படிவம் அவளும் நிரப்பி அதை அழகாக அனுப்பினாள். மீண்டும் தன் கற்பனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரையை தட்டிவிட்டாள். அது வானளாவிய ரீதியில் சுற்றித்திரிந்தது.

இப்படிப் போய்க்கொண்டிருக்கையில் இவளின் சித்தி இவளை ஒரு வயது முதிர்ந்த கிழவருக்கு இரண்டாம் தாரமாக கல்யாணம் கட்ட ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தது. இது சீதாவின் அப்பாவுக்கு கூடத் தெரியாது. இதை ஒரு மாதிரியாக அறிந்த சீதா, தந்தையிடம் அழுது புலம்பினாள். 'அப்பா எப்படியாவது சித்திட்ட சொல்லுங்க எனக்கு இந்த கல்யாணம் வேண்டாம்!. நான் படிக்கணும் இல்லாட்டி இங்கே ஒரு வேலைக்காரியாய் வாழ்றன். அப்படியும் இல்லாட்டி ஒரு அநாதை விடுதியில என்ன விடுங்க' என்று கெஞ்சுகிறாள். அவளின் அப்பாவிற்கு ஒன்றுமே செய்ய முடியாத நிலைமை. அவரின் பேச்சை ஒரு பொருட்டாக மதிக்காத மனைவியிடம் என்னத்த சொல்வது யோசித்தார். இறைவனின் கண்ணில் கூட ஒரு ஈவு உண்டு. அது சீதாவிற்கு தேசியக்கல்வியியற் கல்லூரியின் வாயிலாக வந்தது. அவளிற்கு கல்லூரியில் விஞ்ஞானத்துறையில் முகிழ்நிலை ஆசிரியராகப் படிப்பதற்கான கடிதம் அது.

ஆனாலும் பொறுக்காத காலன் அந்த கடிதத்தை அவளின் சித்தியின் கையில்படும்படி செய்துவிட்டான். ' அப்பாவும் மகளுமா சேர்ந்து என்ன செய்றீங்க? இப்ப நான் சொல்றன் கேளுங்க வாற சனிக்கிழம உங்க மகளுக்கு கல்யாணம்.' என்று கூறி கடிதத்தைக் கிழித்து எறிந்தார். சீதா அழுதுகொண்டு இருக்கையில் அவளின் தந்தை அன்பாக அரவணைத்துக் கூறினார். ' கவலப்படாத பிள்ள, எல்லாம் நல்லது தான் நான் உங்க சித்திய எப்படியாவது சமாதானப்படுத்திறன் ' நாளை அவரின் வார்த்தைகள் அர்த்தமற்றுப் போயின. கல்யாணவேலைகள் தடபுடலாக நடைபெற்றது. வியாழக்கிழமையும் வந்தது. நாளை மறுதினம் அவளிற்கும் ஒரு கிழவனுக்கும் கல்யாணம். சித்தியின் முகத்தில் பூரிப்பு. ஆனால் சீதாவோ அழுது அழுது கடலின் அளவைக் கூட்டிக் கொண்டிருக்கிறாள். இரவானது அவள் உறக்கம் வராமல் இருக்கையில் அவளின் அப்பா வந்து ' மகள்... இண்டைக்கு நான் உன் பக்கத்தில படுக்கிறன் எனக்கு தல இடிக்குது. கொஞ்சம் சித்தாலேப பூசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுறியா!' என்று சொன்னார். அவர் சொன்ன கடைசி வார்த்தை இது என்பது அப்போது சீதாவிற்கு தெரியவில்லை.

காலையும் விடிந்தது. ஆனால் அப்பாவிற்கு இனி நிரந்தர அஸ்தமனம். அவளின் வாழ்க்கையில் இன்னொரு அடி. யாராலும் அசைக்க முடியாத அடி. அவள் அழக்கூட சக்தியற்றவளாய் மழையைப் பார்த்து சிலையாய் சமைந்திருந்தாள். நாட்கள் நகர மறுத்தன. இவளை சித்தி மீண்டும் அதே கிழவருக்கு கல்யாணம் கட்ட ஏற்பாடுகள் தொடர்ந்தாள். மன அழுத்தத்தில் இருந்த சீதாவிற்கு ஒன்றுமே செய்ய முடியவில்லை. தற்கொலை செய்ய எத்தனித்து கடைசியாக தன் அம்மா அப்பாவின் புகைப்படத்தைப் பார்த்து அழுது கொண்டு அதைக் கையில் எடுக்க போகையில் அம்மாவின் புகைப்படத்திற்கு பின்னால் ஒரு பை. அதில் ஒரு கடிதமும் வங்கி வைப்புப் புத்தகமும். அந்தக் கடிதம் அவளின் அப்பாவால் சீதாவிற்கு எழுதப்பட்டது.

**என் அன்பு மகளுக்கு,**

என்னை மன்னித்துவிடு. எல்லாம் என் தவறுதான். நான் உன்னை விட்டு இந்த இராட்சசியை மணந்தது எவ்வளவு பெரிய தப்பு என உணருகின்றேன். இதில் கொஞ்சப்பணம் உள்ளது. அது உன் தேவைகளைப் பூர்த்தி செய்யும். நான் எப்போது உன்னை விட்டுச் செல்வேன் எனத் தெரியாது. நான் போனால் உன் கெதி..... பயமாக இருக்கிறது. நீ நன்றாக வர வேண்டும். உன் புகழ் எங்கும் பரவ வேண்டும். என்னை மன்னித்துவிடு.

இப்படிக்கு அப்பா

அந்தக் கடிதத்துடன் அந்த கல்லூரித் தெரிவுக்கான கடிதமும் இருந்தது. 20 ஆம் திகதிக்கு முதல் வந்து கல்லூரியில் சேரச் சொல்லிய கடிதம் அது.

இதைப் பார்த்து என்ன செய்வது என்று புரியாமல் இருக்கிறாள் சீதா. அவளின் எண்ணங்கள் யாவும் புது உலகை எண்ணியே வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக்கு வழி

கௌதமி தர்மசுந்தரம்
விஞ்ஞானம்(ஆங்கிலம்) 1ம் வருடம்.

*சிந்தும் ஒவ்வொரு நிமிடங்களும்- உன் உயிரைக்*
*கரைத்து ஒழுகிக் கொண்டு செல்கின்றது....*
*கடிகாரச் சத்தங்களின் அர்த்தங்கள் புரியாத மனிதனே!!*
*நேரத்தை வீணாக்காதே !*

*உன் வெற்றியின் முதல் படியைக் கடக்க*
*எதைத் தியாகம் செய்யப்போகிறாய்?*
*தோல்வியின் சுமை தாங்காமல் மரண விளிம்பில்*
*தத்தளிக்கும் உன் இலட்சியங்கள் ஏன் இறக்க வேண்டும்...*

*இன்றைய சமுதாயம் ஒரு திறந்த சாக்கடை*
*சாதிப்பதிலும் சரி.. சரிவிலும் சரி... சாடிக் கொண்டே இருக்கும்..*
*நீயே உனக்கு விலங்கிட்டு கொள்ளாதே !!*
*விலங்குகளைத் தகர்த்து புதிய உலகு படைக்க எழுந்து வா...*

*தொலைவானம் கூட தொடும் தூரம் - தான்*
*முயற்சிகள் மட்டும் இருந்தால்...*
*சோம்பறித்தனம் ஒரு சமாதி அது - உன்னையே*
*கல்லறைக்குள் புதைத்துவிடும் ! - விழித்திரு....*

*உன் கண்கள் எப்போதும் விழித்தே இருக்கட்டும்!!*
*இமைக் கதவுகள் தாழிட்டாலும் மனக்கதவுகள் திறக்கட்டும்...*
*உன் வெற்றிகள் வளர்க்க தோல்விகள் விதை - அப்போது தான்*
*ஆலமரம் கூட புல்லாகத் தெரியும் உன் புகழ் மலையின் உச்சியில்*

**நிற்கையில்!!**
*மகாத்மாக்கள் சொல்லாத தத்துவத்தை நதி சொல்கிறது...*
*கடலை அடையும் வரை ஓய்வில்லை - நதிக்கு!!*
*வெற்றிகள் குவியும் வரை எமக்கும் ஓய்வில்லை...*
*தோல்விகள் மனதைக் கிழித்தாலும் நம்பிக்கை ஒன்றே மருந்து!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வளர்ச்சியில் மேலை நாட்டவரின் பங்களிப்பு

"தமிழுக்கு அமுதென்று பெயர் அத்தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்னும் முதுமொழிக்கிணங்க பழம் நெடுங்கால முதல் முச்சங்கங்களூடாக புலவர்களினாலும், மன்னர்கள் தம் ஊக்குவிப்பினாலும் தமிழ் ஊற்றெடுத்துப் பேரருவியாக ஓடி இன்று வரை கூட வளர்ச்சி கண்டுள்ளது.இதனை பின்வருமாறு கூறுகையில்

"கல்தோன்றி மண்தோன்றா கடல்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த தமிழ்"

என தமிழ் மொழியின் பண்டைய தோற்றத்தை விளக்கலாம். இத்தகைய தமிழ்மொழி தன் தோற்றத்தில் வீரத்தமிழன் என்றால் அது வளர்வதற்கு மேலை நாட்டவரின் பங்கு என்றால் அது மிகையாகாது.

ஆம் சங்ககாலத்திலிருந்தே தமிழ் மொழி வளர்க்கப் பட்டுத்தான் வருகின்றது. சங்கப்புலவர்கள் முச்சங்கங்களூடாக மூவேந்தர் தம் பங்களிப்பினூடாக தமிழ் மொழியினை வளர்த்திருந்தனர். இங்கு தமிழ் மொழி செய்யுள் வடிவில் பதினெண் மேற்கணக்கு நூல்களூடாக வளர்க்கப்பட்டு அடுத்தகால யுகத் துக்கு வந்துவிட்டது.

அவ்வாறே சங்கமருவிய காலத்தில் அறவழியின் பால் கருத்துக்களை வெளிப்படுத்த தமிழ் மொழித்தாய் தன் வளர்ச்சியினை வெளிக்காட்டினாள். அதுபோலவே இறை வனின் பக்தியை வெளிப்புலனாக்கிய பக்தியை வெளிக்காட்டப் பல்லவர் காலத்தில் தமிழ் மங்கை வளர்ச்சிகண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வளர்ச்சிகண்டு வந்த தமிழ்த்தாய் தன் மிகப் பெரும் வளர்ச்சியை சோழர் காலத்தில் காட்டலாயினாள்.காவிய புராணங்களும் இதிகாச சாயலில் அமைந்த சரித்திரங்களும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு சாதகமாகியது.

மேலும் நாயக்கர் காலத்திலும் கூட தமிழ் மொழி செழுமையடைந்தது என்றால் அது தமிழ் மொழியின் வளர்ச்சி யினை தெற்றென புலனாக்குகின்றது.அதாவது பொருளாதார ரீதியில் வரண்ட காலமானாலும் இங்கு தமிழ் செழுமையான ஒரு நிலையில் இலக்கியம் படைக்க வித்திட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பல்வேறு கட்டங்களைத் தாண்டி தமிழ் மொழி மிகப் பிரமிக்கத்தக்க வகையில் வளர்ச்சியினைப் பெற்றிருந்தாலும் அது தனித்து தமிழவரை மட்டும் சாராது.

ஆம் தமிழ் மொழி மேலை நாட்டவரின் பங்களிப்புடனும் வளர்ச்சி கண்டமை, பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் மேலைத்தேய நாட்டவர்களான ஐரோப்பியரின் வருகையும் அவர்களின் பங்களிப்பும் தமிழ் மொழி வளர்ச்சியின் பிரதான காரணம் என்பதில் ஐயமில்லை.

இந்த வகையில் மேலைத்தேயர் தங்களது மத கலாச்சாரங்களை எம்மவரிடையே பரப்பி மதம் மாற்றும் தேவை ஏற்பட்ட போது அதற்கு அவர்களுக்கு உரிய சாதனமாக இருந்தது எங்களது தமிழ் மொழியொன்றே. அதனால் ஐரோப்பியர்கள் தமிழ் மொழியினை நன்கு கற்று அதன் வெளிப்பாடாக தமிழ் மொழியில் இலக்கியங்களைப் படைக்கலாயினர்.

இதன் வெளிப்பாடாக கிறிஸ்தவமதம் சார்பான மதக் கருத்துக்கள் தமிழ் மொழியில் எழலாயிற்று. குறிப்பாக வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணி நூல் அதற்குத்தக்க சான்று எனலாம்.

இவ்வாறு கிறிஸ்தவ மதம் சார்பான கருத்துக்களை வெளியிட கிறிஸ்தவர்களாகிய மேலை நாட்டவர் பத்திரிகை இலக்கியத்தினூடாக தங்கள் நோக்கம் நிறைவேற தமிழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கலாயினர்.இந்த வகையில் ஆங்கில ஐரோப்பிய மிஷனரிமார்களினால் வெளியிடப்பட்ட முதல்பத்திரிகை உதயதாரகை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமிழ் மொழியினூடாக கிறிஸ்தவத்தைத் திணிக்க ஐரோப்பியர் முனைந்த போது சைவம் வீழாத வண்ணம் காப்பதற்கு ஆறுமுக நாவலர் முதலியோரும் சி.வை. தாமோதரம் பிள்ளை முதலியோரும் பாடுபட்டனர். இதன் வாயிலாக மறைமுகமாக அவரவர் மதத்தைக்காப்பாற்ற அவர்அவர்கள் மேற்கொண்ட யுத்திகள் தமிழ் மொழியை வளர்க்கும் சாதனமாகவே விளங்கியமை குறிப்பிடத் தக்கது.

மேலும் ஐரோப்பியர்களான ஜீ.ப.போப் காரல் டு வெல் முதலியோர் தமிழைக்கற்று அதன் விளைவாக தத்தம் மதங்களை பரப்ப முயன்றமை தமிழ் மொழியின் வளர்ச்சியில் மேலை நாட்டவரின் பங்களிப்பினைக் காட்டியது.

அது மட்டுமன்றி ஐரோப்பியர்களான மேலை நாட்டவரின் மொழிபெயர்ப்புப் பணி தமிழ் மொழி வளர மென்மேலும் வித்திட்டமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.இந்த வகையில் தமிழ்- ஆங்கில அகராதி.ஆங்கில- தமிழ் அகராதி என்பனவற்றின் தோற்றம் இதற்கு தக்க சான்றாக அமைந்தமை தமிழ் மொழி வளர்ச்சிகளில் மேலைத்தேய நாட்டவரின் பங்களிப்பினை எடுத்துரைப்பது ஐயமற்ற தெளிவு.

மேலும் மொழிபெயர்ப்புப் பணியின் ஒரு கட்டமாக விளங்குவது ஆறுமுக நாவலர் ஆங்கில மொழிமூல பைபிளை தமிழுக்கு மொழிபெயர்த்தமை என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு மேலை நாட்டவரின் வருகை தமிழ் மொழியில் பெரும் வளர்ச்சியினையும் ஒரு திருப்பத்தையும் கொண்டு வந்தமை பெருமைக்குரிய விடயம் என்பது உண்மை.

இந்த வகையில் மேலை நாட்டவரின் தமிழ் மொழி வளர்ச்சிப் பங்களிப்பில் பிரதான இடம் பெறுவது உரைநடை என்பதில் எந்தவித ஐயமுமில்லை.இவர்களது வருகையினாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைநடைகள் நீண்டவாக்கியவடிவிலமையாது எளிதில் அனைவருக்கும் விளங்கும் வகையில் உரைநடை எளிமைப்படுத்தப் பட்டது தமிழ்மொழியின் மற்றுமொரு பரிணாமம் என்பது தெளிவான உண்மையாகும்.

மேலும் இவ்வாறு மேலை நாட்டவரின் வருகையினால் தமிழ் மொழியில் ஏற்பட்ட மற்றுமொரு வளர்ச்சி குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதலாம்· இதுவரை அல்லாத குறியீடுகளைப் பயன்படுத்தும் முறை மேலை நாட்டவரின் பங்களிப்பினால் தமிழ் மொழியில் பயன்படுத்தப்பட்டமை தமிழ் மொழி வளர்ச்சியில் மேலைநாட்டவரின் பங்களிப்பினை தெற்றெனப் புலனாக்குகிறது.

இது மட்டுமல்லாது அம்பலக்காடு முதலிய இடங்களில் நிறுவப்பட்ட ஐரோப்பியரது அச்சியந்திரச் சாலைகள் மேலை நாட்டவரின் தமிழ் மொழி வளர்ச்சியில் உள்ள பங்களிப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

அதாவது ஏட்டு வடிவில் இருந்த தமிழ் இலக்கியங்கள் செல்லரித்து சீர்கேடு அடையாத வண்ணம் அதனை தாள்களில் அச்சிட்டு அவற்றிற்குப் புத்துயிர் வழங்கியமை மேலை நாட்டவரைச் சாரும்.

மேலும் தங்களது மதக்கருத்துக்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமாயின் அது அனைவரையும் சென்றடைய, ஐரோப்பியர்கள் பத்திரிகைத் துறையை வளர்த்தமை தமிழ் மொழி வளர்ச்சிக்கு மிகப் பெரும் ஊன்றுகோலாக அமைந்தது. இந்தவகையில் பத்திரிகையின் உள்ளீடாகப் புதினக்கதைகள் தொடர் கதைகள், கடிதங்கள் என்பன அமைந்து அவை தமிழ் வளர்க்கும் யுத்திகளாக்கப்பட்டமை மிகக் குறிப்பிடத்தக்க விடயம் மேலும் மேலை நாட்டவரின் மதம் பரப்பும் செயல் தமிழ் மொழியினூடாக மிகத் தீவிரமாக செயற்பட்டமை சைவத்தினர் தம் மதங்களைக் காத்து இலக்கியம் படைக்க முற்பட்ட போது அங்கு தமிழ் மொழி மிகத் தீவிரமாக வளர்ச்சி பெற்றமை குறிப்பிடத் தக்கது. இதன் வெளிப்பாடாக ஐரோப்பியர் காலத்தில் சிவாகம கண்டனம், சிவதூசண் கண்டனம் முதலிய இலக்கியங்கள் தோன்றி பல வழிகளாலும் தமிழ் மொழி வளர மேலை நாட்டவர் பங்களிப்பு உதவியமை குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் நன்றியுரை

எமது கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றமானது வாரந்தோறும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சிறப்பாக தமிழ் மன்ற நிகழ்வுகளை அரங்கேற்றுவதன் மூலம் வருடந்தோறும் வளமானதொரு முத்தமிழ் விழாவினை கண்ணுக்கு விருந்தாக்குவது வழமையே. இம்முத்தமிழ் விழாவானது எம்முகிழ்நிலை ஆசிரியர்கள் ஒவ்வொருவரிடமும் உள்ள தனித்துவமான ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு களம் அமைப்பதும் யாவரும் அறிந்ததே.

அந்த வகையில் இவ்வருடம் முத்தமிழ் விழாவினை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசைத் தட்டிச் சென்றவர்களின் வெற்றி தேடல்கள் அழியாச் சுவடுகளாக இம்முறையும் இரண்டாவது தடவையாக 'எழுந்தமிழ்' என்னும் சஞ்சிகையாக வெளிவந்திருக்கின்றமை சிறப்புக்குரிய விடயமாகும். அந்த வகையில் இச்சஞ்சிகையானது இவ்வாறு ஆக்கபூர்வமாக வெற்றியுடன் வெளிவர எம்மை அன்புடன் வழிநடத்தி நல்வழிப்படுத்திய எமது கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு.எஸ்.கே.யோகநாதன் அவர்களிற்கு முதற்கண் எமது மன்றத்தின் இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

அடுத்து 'எழுந்தமிழ்' சஞ்சிகை மீண்டும் சிறப்பாக வெளியாகிட ஆசிச்செய்தி வழங்கியதோடு மட்டுமல்லாமல் எல்லா வழிகளிலும் வழிகாட்டிய கல்லூரியின் உபபீடாதிபதிகளுக்கும் எமது மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் இச்சஞ்சிகை உருவாகி வெளிவர எம்மை வழிப்படுத்திய எமது மன்றத்தின் காப்பாளர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் அனைவருக்கும் எமது சிரம் தாழ்ந்த நன்றிகள் என்றென்றும். உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் சிறப்புடன் இச்சஞ்சிகை மிளிர போட்டிகளில் பங்குபற்றி தம் ஆற்றல்களை வெளிப்படுத்தி சிறந்த புத்தாக்கங்களை தந்துதவிய முகிழ்நிலை ஆசிரியர்களுக்கும் அவர்களை ஓவியங்களாக வரைந்தெடுக்க வழிப்படுத்திய கல்வியியலாளர்கள் அனைவருக்கும் மன்றத்தின் சார்பாக எமது கரம் கூப்பிய நன்றிகள் உரித்தாகட்டும்.

இச்சஞ்சிகை பூரணத்துவத்துடன் மிளிர்ந்து ஒளிவீச பல்வேறு வழிகளிலும் ஆதரவு வழங்கிய அனைத்து நல் உள்ளங்களிற்கும் எமது மன்றத்தின் சார்பில் ஆதரவான நன்றிகளை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செல்வி. விஜயநிதி இராசகுமார்.**
**இரண்டாம் வருட விசேடகல்வித்துறை**
**செயலாளர் (தமிழ் மன்றம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி முடிவுகள்

**கவிதை**

**[2ம் வருடம்]**

1ம் இடம் :- பாரதி சிவசோதி (ஆங்கிலம்)
2ம் இடம் :- சிந்துஜா தேவபாலன் (விஞ்ஞானம் தமிழ்மொழி மூலம்)
3ம் இடம் :- தங்கராசா சிவகுமார் (இந்து சமயம்) அரசரெத்தினம் கிருபாகரன் (இந்து சமயம்)

**[1ம் வருடம்]**

1ம் இடம் :- கௌதமி தர்மசுந்தரம் (விஞ்ஞானம் ஆங்கிலமொழி மூலம்)
2ம் இடம் :- தேவப்பிரியா பேரின்பமூர்த்தி (ஆங்கிலம்)
3ம் இடம் :- புவி விஸ்வலிங்கம் (ஆங்கிலம்) அனுசா சேகர் (விஞ்ஞானம் ஆங்கிலமொழி மூலம்)

**கட்டுரை**

**[2ம் வருடம்]**

1ம் இடம் :- பாரதி சிவசோதி (ஆங்கிலம்)
2ம் இடம் :- விசித்திராதேவி பெரியதம்பி (இந்துசமயம்)
3ம் இடம் :- நிதர்யா துரைசிங்கம் (ஆங்கிலம்)

**[1ம் வருடம்]**

1ம் இடம் :- தேவரஜனி தட்சனாமூர்த்தி (சங்கீதம்) 2ம்
இடம் :- கௌதமி (விஞ்ஞானம் ஆங்கிலமொழி மூலம்)
3ம் இடம் :- சுசிந்திரா சிவலிங்கம் (விசேடகல்வி)

**சிறுகதை**

**[2ம் வருடம்]**

1ம் இடம் :- அபிராமி விக்னேஸ்வரன் (விஞ்ஞானம் தமிழ்மொழி மூலம்)
2ம் இடம் :- பாரதி சிவசோதி (ஆங்கிலம்)
3ம் இடம் :- சவுந்தரி இராசேந்திரம் (இந்துசமயம்)

**[1ம் வருடம்]**

1ம் இடம் :- கௌதமி (விஞ்ஞானம் ஆங்கிலமொழி மூலம்)
2ம் இடம் :- பியோனி பிரியதர்சினி பேர்சி விக்டர் (கிறிஸ்தவதுறை)
3ம் இடம் :- டிலக்சா சண்முகராஜா (ஆங்கிலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடகப்பிரதியாக்கம் [2ம் வருடம்]**

*1ம் இடம் :- சங்கீதா நவரட்னம் (விஞ்ஞான தமிழ் மொழி மூலம்)*

*2ம் இடம் :- சவுந்தரி இராசேந்திரம் (இந்துசமயம்)*

*3ம் இடம் :- சுகன்ஜா இராஜேந்திரம் (விஞ்ஞான தமிழ் மொழி மூலம்), சரண்ராஜ் தங்கராஜா (விசேடகல்வி)*

**நாடகத்திற்கான சிறப்புப் பரிசில்**

*கணிதம் - (தமிழ்மொழி மூலம்)*
*சித்திரத்துறை*

**[1ம் வருடம்]**

*1ம் இடம் :- டிலக்சா சண்முகராஜா (ஆங்கிலம்)*

*2ம் இடம் :- சுபதர்சினி சகாயநாதன் (சித்திரம்)*

*3ம் இடம் :- sis. டிலிசியா (கிறிஸ்தவம்) நிரோசா (நாடகம்)*

**தனி நடிப்பு [2ம் வருடம்] [நாடகத் துறை]**

*1ம் இடம் :- யூட் கமில்டன் பற்றிக்*

*2ம் இடம் :- கஜமுகன் பரமசிவம்*

*3ம் இடம் :- பிரதீபா கந்தசாமி, கிருஸ்ணநந்தினி செல்லத்துரை*

**குழு இசை [2ம் வருடம்] [ஏனைய துறை]**

*1ம் இடம் :- பாலசுப்பிரமணியம் றஜிந்தன்*

*2ம் இடம் :- சுகன்ஜா இராஜேந்திரம்*

*3ம் இடம் :- தங்கராஜா சரண்ராஜ், ஜெயராணி மகாதேவன்*

**தனிநடிப்பு [1ம் வருடம்] [நாடகத் துறை]**

*1ம் இடம் :- இமாஜினி வீரபாகு*

*2ம் இடம் :- சுவீற்றி ஈஸ்வரபாலன்*

*3ம் இடம் :- ஜெயராஜ் விக்னராஜா, நிரோயன் மதிமுகன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **தனிஇசை** | | **[2ம் வருடம்] [சங்கீதத் துறை]** |
| 1ம் இடம் | :- | கஜேந்தினி கணேசன் |
| 2ம் இடம் | :- | யாழினி சிவநேசன் |
| 3ம் இடம் | :- | ஜெனனி முத்துக்குமார் |
| | | **[1ம் வருடம்]** |
| 1ம் இடம் | :- | கிறிஸ்தவத்துறை |
| | | நெறியாள்கை- ம.ஜனனி |
| 2ம் இடம் | :- | விசேட கல்வித்துறை |
| | | நெறியாள்கை- கோசலா, மஞ்சுளா |
| 3ம் இடம் | :- | இந்துசமயத்துறை, ஆங்கிலத்துறை |
| **தனிநடனம்** | | **[2ம் வருடம்][ஏனைய துறை]** |
| 1ம் இடம் | :- | க்ஷியாமளி சிவநேசன்(ஆங்கிலம்) |
| | | **[2ம் வருடம்]** |
| 1ம் இடம் | :- | றோமியா செல்வரட்ணம் |
| 2ம் இடம் | :- | உஷாநந்தினி கனகேந்திரம் |
| 3ம் இடம் | :- | ருஷியந்தி செல்வநாயகம் |
| | | சர்மிளா பாஸ்கரமூர்த்தி |
| | | **[1ம் வருடம்]** |
| 1ம் இடம் | :- | சைலயா சண்முகலிங்கம் |
| 2ம் இடம் | :- | ஜெயிந்தனா சண்முகானந்தன் |
| 3ம் இடம் | :- | வைஸ்ணவி யோகதாசன், தர்ஜினி தேவராஜ் |
| **குழு நடனம்** | | **[2ம் வருடம்]** |
| 1ம் இடம் | :- | விசேட கல்வித்துறை, விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்) நெறியாள்கை :- ருஷியந்தி |
| 2ம் இடம் | :- | சங்கீதத்துறை, நாடகத்துறை, கிறிஸ்தவத் துறை. நெறியாள்கை :-கேமராதா |
| 3ம் இடம் | :- | ஆங்கிலத்துறை, கணிதம் (ஆங்கில மொழி மூலம்) நெறியாள்கை :-கனிதீபா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org